Registered as a NewsPaper

விலை ரூபா : 08

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 பங்குனி-07 20-03-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 30


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
உரிமையாளர்:-
S.M. சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247
(சி-11455)


## அன்ரன் பாலசிங்கத்தின் "போரும் சமாதானமும்" சிறப்புற நடைபெற்ற வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம் எழுதிய "போரும் சமாதானமும்" என்ற நூலின் அறிமுகவிழா நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இடம் பெற்றது.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை பிரதிநிதி இ.புவிராஜ் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ்.பல்கலைக்கழகத் துணை வேந்தர் சு.மோகனதாஸ், பல்கலைக்கழக நூலகர் திருமதி. றோகினி பரராஜசிங்கம், பேராசிரியர் ராஜேஸ்வரன், தமிழீழ மாணவர் அமைப்புப்பொறுப்பாளர் நளன், தூயவன் அரசறிவியற்கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா ஆகியோர் ஏற்றி வைக்க,

தமிழீழத்தேசியக்கொடியினை தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து ஈகச்சுடரினை யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவர் அருள்வேல் ஏற்றிவைத்தார். (12ஆம் பக்கம் பார்க்க)



# ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் வாழ முடியும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் இல்லை!

## ஐ.நா.சபையின் கலந்துரையாடலில் ம.வி.உ. சர்வதேச நிலையப் பொதுச்செயலாளர்

(நியூயோர்க்)

**ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் வாழ முடியும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் இல்லை என ஐக்கிய நாடுகள் சபையின் கலந்துரையாடல் ஒன்றில் மக்கள் விடுதலைக்கும் உரிமைக்குமான சர்வதேசநிலையத்தின்பொதுச் செயலாளர் வெரீனா விராப் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் 61 ஆவது மனித உரிமை தொடர்பான கலந்துரையாடலின் போதே இக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. ஜெனீவாவை தலைமையகமாக கொண்டுள்ள இந்த அமைப்பு இலங்கையின் இன முரண் (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அரசியல் குழுவினர் சுவிற்சர்லாந்திற்கு விஜயம்



அரசியல் பணியை முன்னெடுக்கும் முகமாக ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் குழுவினர் தமது விஜயத்தின் ஒரு கட்டமாக சுவிற்சர்லாந்துக்கு விஜயம் செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 4.15 மணிக்கு சூரிச் விமானநிலையத்தை வந்தடைந்த தமிழீழ விடுதலைப்புலி (12ஆம் பக்கம் பார்க்க)

## தெளிவற்ற அரசியற் சூழ்நிலை தமிழ் மக்களை மோசமாகப் பாதித்து வருகிறது!

### "போரும் சமாதானமும்" நூல் வெளியீட்டு நிகழ்வில் வே. பாலகுமாரன்



"நாட்டினில் நிலவி வரும் சீரற்றதும் தெளிவற்றதுமானதோர் அரசியல் சூழ்நிலை தமிழ்ச் சமூகத்தை மனநிலை ரீதியில் மிக மோசமாகப் பாதித்து வருவதாக கவலை தெரிவித்தார் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர் வே.பாலகுமாரன் "இது தமிழ் சமூகத்தை ஓர் நெருக்கடியானதோர் நிலைப்பாட்டிற்குத் தள்ளி வருவதாகவும்" அவர் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களால்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நவீன தொழில் நுட்ப நஞ்சூட்டல் மூலமே யசீர் அரபாத் கொல்லப்பட்டார்

### ~இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கருத்து

பலஸ்தீனத்தின் முன்னாள் அதிபர் யசீர் அரபாத் நவீன தொழில்நுட்ப நஞ்சூட்டல் முறை மூலம் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் அத்தலா குய்பா இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

அரபாத் நோய் வாய்ப்பட்ட தினத்தன்று அவரைச் சந்தித்த இரு இஸ்ரேலியர்களும் லேசர் கருவி மூலம் யசீர் அரபாத் மீது தாக்குதல் நடத்தியதாகவும் இதனை (12ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி நினைவு நாட்கள் நேற்று எழுச்சி பூர்வமாக ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)



தியாக தீபம் அன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு நினைவு தின ஆரம்பநாள் நிகழ்வு நேற்று தமிழர் தாயகமெங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பெற்றது.

நேற்றுக்காலை 9.00 மணிக்கு பொதுச்சுடரேற்றல், தமிழீழத்தேசியக் கொடியேற்றலுடன் அன்னை பூபதி அவர்களின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தப்பட்டு அதனைத் தொடர்ந்து நினைவுரைகள் இடம் பெற்றன.

கிளிநொச்சியில் மாவட்டம் தழுவிய முதல்நாள் நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட நிர்வாகசேவை பணிமனையில் நடைபெற்றது. நேற்றுக்காலை 9.00 மணியளவில் (12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

இயக்கச்சி-ஆனையிறவுக்கும் இடையில் வல்லிபுரம்-கிருபாகரன் என்பவருடைய 691650588V I.C, பாஸ் 17.03.2005 மாலை 2.00 மணியளவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உப்பு உ.தி நிறுவனம் ஆனையிறவு அல்லது கிராமிய அபிவிருத்தி வங்கி, கிளிநொச்சியில் ஒப்படைக்கவும் :- தகவல் கிருபாகரன். (5866)

### விற்பனைக்கு

புதுக்குடியிருப்பில் சுவையூற்றிற்கு மிக அண்மையில் புனித சூசையப்பர் கோவில் வீதியில் வீடு, காணி சகல அடிப்படை வசதிகளுடனும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: இன்பம் மணிக்கூட்டு விற்பனை நிலையம், புதுக்குடியிருப்பு இனியவள் அழகு மாடம் பிரதான வீதி, முல்லைத்தீவு.(5909)


# இந்த மக்களுக்கு வைத்திய உதவி செய்யும் ஒரே நோக்குடனேயே இங்கு வந்தேன்!

## அவுஸ்திரேலிய சத்திர சிகிச்சை நிபுணர் கிறீஸ் றொபேட்



(நமது நிருபர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லை மாவட்ட மக்களுக்கு வைத்திய உதவிகள் செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்குடனேயே தான் இங்கு வந்ததாக அவுஸ்திரேலியாவின் என்பு சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் கிறீஸ்றொபேட் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்து புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவ மனையில் என்பு சத்திர சிகிச்சைகளில் ஈடுபட்டு வரும் இவர் நேற்று செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு வந்து மருத்துவப் பணிபுரிவதில் பெருமையடைகிறேன். இங்கு வந்ததன் பின்பு தான் இந்த மக்களைப் பற்றியும் இந்த மக்களின் பிரச்சினைகள் பற்றியும் அறிய முடிந்தது.

தற்போது நிலவி வரும் சமாதானம் தொடர்ந்தும் நிலவ வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

இங்கு உள்ள மக்கள் மிகவும் அன்பானவர்கள், மனவுறுதி படைத்தவர்கள் என்பதை நினைக்கும் போது சந்தோசமாகவுள்ளது. மீண்டும் அவுஸ்திரேலியா சென்று அங்கிருந்து மேலும் பல வைத்திய நிபுணர்களை இப்பகுதிக்கு அழைத்து வந்து வைத்தியப் பணி செய்ய வேண்டும் என்ற உறுதியில் உள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (தீ)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

லண்டனிலிருந்து வருகை தந்திருந்திருக்கும் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணரினால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



இதன் ஆரம்ப சிகிச்சையாக பழைய முகக்காயங்கள், தழும்புகள், நெருப்பால் எரிந்த காயங்கள், கை, கால்களில் காயங்கள் உள்ளவர்களில் சிகிச்சை மேற்கொள்ளக் கூடியவர்களை இனம் கண்டு அவர்களுக்குரிய ஆலோசனை வழங்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது.

மேற்படி சிகிச்சையினை மாவட்ட வைத்திய அதிகாரியும் சத்திர சிகிச்சை நிபுணரும் நேற்று காலை 8.30 மணி தொடக்கம் வைத்தியசாலையில் மேற்கொண்டனர்.

அத்துடன் எதிர்வரும் 26 ஆம் திகதியும் மேற்படி சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதென வைத்திய அதிகாரி சதானந்தன் தெரிவித்துள்ளார். (கு)

# பொன்னம்பலம் மருத்துவமனையில் தொடர்ச்சியாக கண்சத்திரசிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

இங்கிலாந்திலிருந்து வருகை தந்துள்ள கண் சத்திர சிகிச்சை நிபுணர்கள் அடங்கிய குழுவினர் புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் கண் சத்திர சிகிச்சைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன.



கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் நடத்தப்பட்டு வரும் இச் சிகிச்சை நாளை வரையும் தொடர்ச்சியாக நடை பெறவுள்ளது. இதில் வயது வேறுபாடின்றி சிறுவர் முதல் பெரியோர் வரை சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் பார்வை குறைபாடு உள்ளவர்களுக்கு நவீன கருவிகள் மூலம் பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு மூக்கு கண்ணாடிகளும்



வழங்கப்பட்டு வருகின்றன.

இடவசதிகள் இல்லாத போதும் சிகிச்சை அளிக்கப்பட்ட நோயாளர்கள் தங்குவதற்காக தற்காலிக கூடாரங்கள் அமைக்கப்பட்டு அதிலே சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இது வரையும் நடைபெற்ற சிகிச்சையின் மூலம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பார்வை இழந்த நோயாளர்கள் சிகிச்சை பெற்று சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தீ)

## —வவுனியா கல்வியியற் கல்லூரியிலிருந்து—

# ஆசிரிய பயிலுநர்கள் மூவர் இடை நிறுத்தம்

(வவுனியா செய்தியாளர்)

கடந்த ஆண்டில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து மூன்று ஆசிரியப் பயிலுநர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அதன் பீடாதிபதி க.பேர்னாட் தெரிவித்துள்ளார்.

கல்வியியற் கல்லூரிகளில் மூன்றாண்டு காலப் பாடநெறியைப் பின்பற்றும் ஆசிரியப் பயிலுநர்கள் அக் காலத்தினுள் திருமணம் செய்ய முடியாது.

மூன்று ஆசிரியப் பயிலுநர்கள் திருமணம் செய்து விட்டு கல்வியியற் கல்லூரிக்கு வந்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டனர். கல்வியியற் கல்லூரியில் இருந்து இடை நிறுத் தப்படுபவர்கள் அவர்களைக் கற்பித்த செலவாக ஒருலட்சத்து தொண் ணூறாயிரம் ரூபாவினைச் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்த தவறுபவர்களுக்கு அவர்களின் கல்விச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் வழங்கப் படமாட்டாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (10)

# பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் அன்னாசி உறிஞ்சிகள் விநியோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் தென்னிலங்கையிலிருந்து தருவிக்கப்பட்ட அன்னாசி உறிஞ்சிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாகப் பத்தாயிரம் அன்னாசி உறிஞ்சிகள் கிளி.மாவட்டத்தில் பிரதேச ரீதியாக வழங்கப்பட்டுள்ளது. இவை கண்டாவளை, வட்டக்கச்சி, பரந்தன், முழங்காவில், பளை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் வழங்கப்பட்டுள்ளன.

அன்னாசி உறிஞ்சிகள் தேவைப்படுபவர்கள் அந்தந்த பகுதி பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் செந்தில் தெரிவித்துள்ளார். (46)


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்-முல்லைத்தீவுக் கிளை

# பதவி வெற்றிடம்

### திட்ட இணைப்பாளர் Project Coordinator

சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் இலங்கை செஞ்சிலுவைசங்க முல்லைத்தீவு கிளையினால் நடாத்தப்படும் செஞ்சிலுவைச் சுகாதார சேவையில் திட்ட இணைப்பாளராக சேவையாற்றுவதற்கு கீழ்குறிப்பிடப்படும் தகைமையுடையவர்கள் எதிர் வரும் 26.03.2005 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் தங்கள் விண்ணப்பங்களை தகைமைச் சான்றிதழ்களின் நிழற் பிரதிகளுடன் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

**தகைமைகள்:-**

கபொத.(உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி. ஆங்கிலம், தமிழ் எழுத பேச நன்கு தெரிந்திருத்தல் வேண்டும். சுயமாக திட்டங்கள் தயாரிக்கவும், செயற்படுத்தவும் தெரிந்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:-**

23 – 55 இற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். இலங்கை செஞ்சிலுவைச் சங்க தொண்டர்களுக்கும், அங்கத்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். அடிப்படை கணினி அறிவு இருத்தல் வேண்டும்.

வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
கௌரவ தலைவர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
புதுக்குடியிருப்பு.

(சி.11569)


# சாவு அறிவித்தல்

## ஆழ்வாப்பிள்ளை தர்மலிங்கம்




தும்பளை பருத்தித்துறையை சொந்த முகவரியாகக் கொண்டவரும் அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தின் பயனாளியுமான துணைப்படை மாவீரர் யசோதரன் அவர்களின் தந்தையுமான ஆழ்வாப்பிள்ளை தர்மலிங்கம் அவர்கள் 19.03.2005 சனிக்கிழமை காலமாகி விட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 20.03.2005 இன்று மாலை 3.00 மணிக்கு கனகபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்கப்படுகின்றீர்கள்.

தகவல்:-
அன்புச் சோலை மூதாளர் பேணலகம்,
கனகபுரம், கிளிநொச்சி.

(சி.11605)

# யாழ்.இல் தியாகி அன்னை பூபதி நிகழ்வு



# மீன்களைப் பறித்த படையினர்; மனித உரிமைக் குழுவிடம் சிக்கினர்!

### யாழ் . காக்கை தீவுப் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.நகரை அண்டிய காக்கைதீவுப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களை அச்சுறுத்தி மீன்களைப் பறித்து வந்த படையினர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரிகளால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக யாழ்.மாவட்ட படைகளின் தலைமைக்கும் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.**

குறிப்பாக காக்கைதீவு கடற்பரப்பினில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு விட்டு கரை திரும்பும் மீனவர்களிடையே கரையோரக் காவலரண்களில் இருக்கும் இராணுவத்தினர் அச்சுறுத்தி மீன்களைப் பறித்து வந்துள்ளனர். தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் இம் மீன் பறிப்புச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தினில் முறைப்பாடுகளைச் செய்திருந்தனர்.

இதையடுத்தே கடந்த வியாழக்கிழமை நேரில் சென்றிருந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது அப்படையினர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ளனர். மீன்பிடித் தொழிலுக்குச் சென்று விட்டு கரை திரும்பும் மீனவர்களை கரையோரப்பகுதியில் மற்றுமொரு மீன் பிடிப்படகில் வந்து வழிமறிக்கும் சிவில் உடையில் இருந்த படையினரே அச்சுறுத்தி மீன்களைப் பறிக்கும் போது அகப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக அப்பகுதியிலுள்ள இராணுவ உயர் அதிகாரிகளுக்கு அறிவித்த ஆணைக்குழு அதிகாரிகள் இவ்விடயத்தினில் உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற கொள்ளுமாறு படைத் தலைமையைக் கோரியுள்ளனர். (27)

# வடமராட்சி இன்பருட்டியில் படகு கட்டுமான சேவைகள்

(வடமராட்சி)

சுனாமிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு தங்களது மீன்பிடித் தொழில் உபகரணங்களை இழந்த மக்களுக்கு மீண்டும் தொழில் செய்யக் கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும்பொருட்டு யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் கடல்சார் இயந்திரவியல் சேவை நிறுவனத்துடன் இணைந்து படகுக் கட்டுமானச் சேவைகளைச் செய்து வருகின்றது.

வடமராட்சி கிழக்கு இன்பருட்டிப் பகுதியில் முதற்கட்டமாக சேதமடைந்த பத்துப் படகுகளைத் திருத்திக் கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் அதேவேளை, பருத்தித்துறையிலும் ஆறு படகுகளைத் திருத்தம் செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சேதமடைந்த படகு ஒன்றினைத் திருத்தம் செய்வதற்கு ஒரு லட்சம் ரூபா பணம்வரை செலவாகின்றது. இதுவரையில் பருத்தித்துறையில் மூன்று படகுகளின் திருத்த வேலைகள் முடிவுற்றுள்ளன.

இன்பருட்டிப் பகுதியில் இரண்டு படகுகள் திருத்துவதற்கான வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

# தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் பற்றைகள் மண்டிக் காணப்படுகின்றன

(நல்லூர்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி வளாகம் பற்றைகள் நிறைந்து காணப்படுகின்றன. நூற்றுக்கணக்கான மாணவர்கள் கல்வி கற்கும் இந் நிறுவன வளாகம் உரிய முறையில் துப்புரவு செய்யப்படாமல் புதர்கள் மண்டிக் காணப்படுகின்றன.

தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மலசலக் கூடத்திற்கு செல்லும் பாதையும் கழிவு பொருட்களாலும், புற்கள் நிறைந்தும் காணப்படுகின்றன. இதனால் இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். சம்பந்தப்பட்டோர் இதில் கவனம் செலுத்த வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. (41)

# நாவற்குழி முதல் தனங்கிளப்பு வரை மிதி வெடி அகற்ற படையினர் தடை!

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்மராட்சி தெற்குப் பகுதிகளில் உள்ள நாவற்குழி தொடக்கம் தனங்கிளப்பு வரையிலான பகுதிகளில் மிதி வெடிகள் அகற்றப்படாமையால் அங்கு மக்கள் மீளக் குடியமர முடியாத நிலை காணப்படுகின்றது.

இப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் ஏராளமானோர் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமரத்தயாராக உள்ள போதும் படையினரது அனுமதியின்மை, மிதி வெடிகள் அகற்றப்படாமை போன்றன இதற்கு பெரும் தடையாகவுள்ளது.

இதனால் இப் பகுதி மக்களின் மீள் குடியேற்றம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. (33)

# 2004 இல் செயற்படுத்தப்படாத திட்டங்களை இவ்வாண்டு செயற்படுத்த தீர்மானம்

உலக உணவுத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டில் யாழ்.குடாநாட்டில் அமுல்படுத்தப்பட்ட திட்டங்களில் பத்து வீதமான திட்டங்கள் இன்னமும் பூர்த்தியாக வில்லையென யாழ்.அரச செயலகம் தெரிவித்திருக்கிறது.

நிர்வாகச்சிக்கல்கள், அதிகாரிகளின் கவனமின்மை போன்ற பல்வேறு காரணங்களாலும் இப் பத்து வீதமான திட்டங்கள் நிறைவேற்றப்படாதுள்ளது.

எனவே இத்திட்டங்களை இவ்வாண்டு யாழ்.குடாநாட்டில் நடைமுறைப்படுத்தவுள்ள உலக உணவுத்திட்டத்துடன் இணைத்து நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (33)

# யாழ்.குடாநாட்டில் சிங்களப் படையினர் 'பார்த்தீனியம்' அழிப்பிற்கு முட்டுக்கட்டை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் "பார்த்தீனியம" என்ற விஷச் செடியின் பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயம் தடையாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் உள்ள இராணுவ முகாம்களை அண்டிய பகுதிகளிலும் பாதுகாப்பு வலயப் பகுதிகளிலும் அதிகளவிலான "பார்த்தீனியம" செடி பரவிக் காணப்படுகின்றது.எனினும் படையினர் அவற்றை அழிக்காது இருப்பதுடன், அவற்றை அழிக்கச் செல்வோரையும் அனுமதிப்பதில்லை. இதனால் அப்பகுதிகளில் பார்த்தீனியம் செடியின் பரம்பல் அதிகரித்துக் காணப்படுகிறது. (33)

# வவுனியா கூமாங்குளம் பகுதியில் இளைஞர் தீ மூட்டி தற்கொலை

வவுனியா கூமாங்குளம் பகுதியில் கடந்த புதன்கிழமை இளைஞர் ஒருவர் தீ மூட்டி தற்கொலை செய்துள்ளார்.

கூமாங்குளத்தைச் சேர்ந்த ஆட்டோ சாரதியான சிறிகரன் சிறிதர் (வயது-27) என்ற இளைஞனே தீ மூட்டி தற்கொலை செய்து கொண்டவராவார்.

இம்மரணம் தொடர்பான மரண விசாரணையை வவுனியா நகர திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிஷோர் மேற்கொண்டார். தற்கொலை செய்து கொண்ட இளைஞனின் தந்தையான சிறிகரன் சாட்சியம் வழங்கினார் (10)

# இயல்பான பொருளாதாரம் ஏற்படாமல் நிவாரணத்தை நிறுத்த வேண்டாம்

### -பொது மக்கள் வேண்டுகோள் விடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இயல்பான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய சூழல் மீளத் திரும்பாத நிலையில் மீளக் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டோருக்கு உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்படக்கூடாததென பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ். குடாநாட்டில் அரசினால் வழங்கப்பட்டு வரும் 25000 ரூபா மீள் குடியமர்வு கொடுப்பனவுகள் கிடைத்தவர்களுக்கு அரசாங்க அதிபரினால் உலருணவு நிவாரணம் நிறுத்தப்பட்டு வருகிறது.

யாழ். குடாநாட்டில் மக்கள் மீளக் குடியமரத் திரும்பியுள்ள போதும் பாதுகாப்பு வலயக் கெடு பிடிகள் மற்றும் இராணுவ நெருக்கு வாரங்களால் மக்களுக்கு இயல்பு வாழ்வும், இயல்பான பொருளாதார மேம்பாட்டு நடவ டிக்கைகளும் மீளத் திரம்பாத நிலையில் இந் நிவாரண நிறுத்தமானது மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது என மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர் (33)

### ~பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையை –

# பொது வைத்தியசாலையாக தரமுயர்த்த அடிப்படை வசதிகள் வேண்டும்!

(பருத்தித்துறை)

யாழ். பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையை பொது வைத்தியசாலையாகத் தரமுயர்த்துவதற்கு சுகாதார அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ள போதும் அவ்வைத்தியசாலையில் பொது வைத்தியசாலையாகத் தரமுயர்த்துவதற்கேற்ற அடிப்படை வசதிகள் காணப்படவில்லையென அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இவ் வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறை, இடவசதி இன்மை மருத்துவ உபகரணங்கள் இன்மை போன்ற அடிப்படை வசதிகள் பற்றாக் குறையாகவுள்ள நிலையில் பெயரளவில் மட்டும் இதனை தரமுயர்த்துவதில் பயன் ஏதும் இல்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (33)

-தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியகத்தில்-

# கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் குழு புனர்வாழ்வுப் பணிகள் குறித்து ஆராய்வு

**கனடா நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகளை கிளிநொச்சியிலுள்ள தமிழர் புனர் வாழ்வுக் கழக நடுவப்பணியகத்தில் சந்தித்து சுனாமி கடற்பேரலை அனர்த்தப் பாதிப்புக்கள் தொடர்பாகவும், முதற்கட்ட, இரண்டாம்கட்ட புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளது.**



கடந்த புதனன்று பாராளுமன்ற உறுப்பினர் மரியா மின்னா தலைமையில் வருகைதந்த தூதுக்குழுவினரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டமிடல் பணிப்பாளர் லோரன்ஸ் கிறிஸ்ரி தலைமையிலான குழுவினரும் இக்கலந்துரை யாடலில் பங்குபற்றினர்.

சுனாமிக்குப் பின்னரான துரிதபுனர்வாழ்வு அபிவிருத் திச்சேவை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் ஒருங்கிணைத்து முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டச் செயற்பாடுகள் தொடர்பாகவும், குறிப்பாக இரண்டாம் கட்டமாக முன்னெடுக்கப்பட்டுவரும் இடைக் கால்க் குடியிருப்புக்கள், மீண்டும் கடலுக்குச் செல்லுதல் போன்ற செயற்றிட்டங்கள் பற்றியும், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் கேட்டறிந்து கொண்டனர்.

## கோட்டமட்டத்தில் கலந்துரையாடல்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் களுக்கான கலந்துரையாடல் கோட்ட மட்டத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன், மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் ஈழவன். மற்றும் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை யின் உறுப்பினர்கள் கலந்து கொள் கின்றனர். (08)

## மருதங்கேணி ராஜீவ் வீதியை புனரமைக்க வேண்டுகோள்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி ராஜீவ் வீதி முற்றாக சேதமடைந்து குன்றும் குழியுமாகவுள்ளது. தற்போது இவ்வீதியில் கூடுதலான கனரக வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றன. சுனாமியின் பின்பு மீட்பு நடவடிக்கையிலும், காணிகளைத் துப்புரவு செய்வதற்காகவும் பெக்கோ, டிப்பர் வாகனங்களின் போக்குவரத்தும், ஏனைய பொது மக்களின் வாகனங்களும் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. இதன் காரணமாகப் பாரிய குன்றும் குழியுமாகவுள்ளது. இந்த வீதி மிக முக்கியமான வீதி. இவ்வீதியில்தான் மருதங்கேணி இ.த.க. பாடசாலை அமைந்துள்ளது. பாடசாலை செல்லும் மாணவர்கள் பெரும் கஷ்ரப்படுகின்றனர். பெரும் கல்லுகள் மிதந்து துவிச்சக்கர வண்டியில் கூடப் பயணம் செய்ய முடியாமல் உள்ளது. எனவே இவ்வீதியை சம்பந்தப்பட்டவர்கள் கூடிய கவனம் எடுத்து திருத்தித் தரும்படியும் வேண்டுகை விடுக்கப்பட்டுள்ளது. (11)

## உடையார்கட்டில் வீடு தீப்பற்றி எரிந்துநாசம்!

(உடையார்கட்டு)

உடையார்கட்டு வடக்குப்பகுதியில் வீடு ஒன்று கடந்த வியாழன் தீப் பிடித்து முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளது. இப்பகுதியைச்சேர்ந்த இராஜகுலேந்திரன் என்பவரது வீடே தீப்பிடித்து எரிந்துள்ளது. இத்தீவிபத்துச் சம்பவம் இடம் பெற்ற போது வீடுபூட்டிய நிலையில் இருந்ததாகவும், வீட்டில் எவரும் இருக்க வில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. வீட்டில் இருந்த தளபாடங்கள், உடு புடைவைகள், பெறுமதி வாய்ந்த பொருட்கள் என்பனவும் எரிந்து நாசமாகின.(19)

## முகாம் பராமரிப்பில் ஈடுபட்டு வரும் பணியாளர்களுக்கு பயிற்சி நெறி

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒழுங் கமைப்பில் நோர்வே அகதிகளுக்கான பேரவையினால்



வடக்கு கிழக்கு மாகாணத்தில் முகாம் பராமரிப்பில் ஈடுபட்டு வரும் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சார்ந்த பணியாளர் களுக்கான ஆறு நாட்கள் உள்ளிட்ட முகாம் முகாமைத்துவப் பயிற்சி நெறியொன்று கடந்த புதன் கிழமை கிளிநொச்சி வெண்புறா கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகி தொடர்ந்தும் நடைபெற்றுவருகின்றது.

சுனாமி கடற்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து முகாம்களிலுள்ள மக்களின் பராமரிப்பில் பங்கேற்றுள்ள நிறுவனங்களைச்சார்ந்த 20 பணியாளர்கள் இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டுள்ளதுடன், இப்பயிற்சி நெறியை நோர்வே அகதிகளுக்கான பேரவையைச் சார்ந்த ஜெனிபர் கிறின் கிவெள்மோ, கிளிட்கொப் பிரிட்ஸ் ஆகி யோர் வள அணியினர்களாகக் கலந்துகொண்டு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## புதுக்குடியிருப்பு நகரில் கட்டாக்காலிகள் தொல்லை

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் பரவலாக கட்டாக்காலிக் கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் இரவு வேளைகளில் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும்சிரமங்களை எதிர்நோக்கு கின்றனர். அத்துடன் வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன. புதுக்குடியிருப்பு துர்க்கா வீதியில் மாம்பழம் சந்தியில் அதிகமான கட்டாக்காலிக் கால் நடைகள் நிற்பதை அவதானிக்க முடிகின்றது. இதனால் சம்பந்தப்பட்ட வர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள கோரிக்கை விடுத்துள்ளனர். (08)

## விளக்கமறியல் நீடிப்பு

இந்தியாவிலிருந்து பெறப்பட்ட மின்பிறப்பாக்கிகள் காணாமல் போன சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களை மீண்டும் விளக்க மறியலில் வைக்குமாறு திருகோணமலைப் பதில் நீதவான் உத்தர விட்டுள்ளார். திருகோணமலை மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்ட 12 மின்பிறப்பாக்கிகள் காணாமல் போன சம்பவம் தொடர்பாக உதவிக் காணி ஆணையாளர் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## டெனிஸ் அகதிகள் பேரவையின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்ட கிராமத் திட்டங்கள் நிறைவு

(அலுவலக செய்தியாளர்)

மன்னார் மாவட்ட தமிழர்புனர் வாழ்வுக்கழகத்தின் திட்டக்கிராமமான இத்திக் கண்டல் கிராமத்தில் டெனிஸ் அகதிகள் பேரவையின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பெற்ற கிராமத் திட்டங்களின் நிறைவுநாள் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை யன்று இத்திக்கண்டல் கிராம அபிவி ருத்திச்சங்க மண்டபத்தில் நடை பெற்றது.

இத்திக்கண்டல் கிராம மக்களி னால் ஏற்பாடு செய்யப்பெற்ற இந் நிகழ்வில் டெனிஸ் அகதிகள் பேரவை யின் மாவட்ட திட்ட இணைப்பாளர் விஜயலட்சுமி, அடம்பன் பங்குத் தந்தை வணபிதா இராஜநாயகம் அடிகள், கிராம அலுவலர் பாலைக் குழி போர் எழுச்சிக்குழுத்தலைவர் ஜெயசிங்கம் சௌந்தரநாயகம், தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்ட இணைப் பாளர் அ.ஜேசுதாசன் ஆகியோர் கலந்து சிறப்புரை வழங்கினர்.

இத்திக்கண்டல் மாதர் அபிவிருத்தி சங்கத்தின் ஒருங்கமைப் பில் மாதர் சங்க உறுப்பினர் செல்வி.குணவதி தலைமையில் மேற்படி வைபவம் நடைபெற்றது.

மேற்படி கிராமத்தில் டெனிஸ் அகதிகள் பேரவையின் நிதியுதவி யுடன் தமிழர்புனர்வாழ்வுக்கழ கத்தினால் 6.7 மில்லியன் ரூபா செலவில் இக்கிராமத்தில் திட்டங்கள் மேற்கொள்ளப்பெற்றமை குறிப்பிடத் தக்கது. (சோ)

### விசுவமடுவில் ஒன்று கூடல் நிகழ்வு

(உடையார்கட்டு)

விசுவமடு விவசாயிகள் ப.நோ.கூ. சங்கத்தில் விசுவமடு பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் கார்த்திக் தலைமை யில் விவசாயிகள், மக்கள், பொது அமைப்புப் பிரதிநிதிகளுக்கான ஒன்று கூடல் நிகழ்வு கடந்தவாரம் இடம் பெற்றது.

இதில் விசுவமடுப் பிரதேசத்தின் வளர்ச்சி தொடர்பாக ஆராயப்பட்டது. ஒன்றுகூடலில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்துணைப்பொறுப்பாளர் சின்னண்ணன், முல்லை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு இணைப் பாளர் அணியழகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (19)

### *வேண்டுகோள்*

(ஒட்டுசுட்டான்)

நெடுங்கேணிப் பிரதேச மக்கள் தங்கள் கால்நடைகளுக்கு செயற்கை முறைச் சினைப்படுத்தல் சேவை யைப்பெறும் வழியை ஏற்படுத்தித் தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ள னர். (05)

## பொதுநோக்கு மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டும் அமைக்க வழியில்லை!

*–மாசார்க் கிராமத்தில் சம்பவம்*

(வடமராட்சி கிழக்கு)

இந்தவருடம் நிகொட் திட்டத்தின் கீழ் எட்டு இலட்சம் ரூபா செலவில் பொதுநோக்கு மண்டபம் ஒன்று கட்டு வதற்காக மாசார்க்கிராமம் தெரிவு செய்யப்பட்டு அண்மையில் அதற் கான அடிக்கல்லும் நாட்டப்பட்டது. இதில் நிகொட்திட்டப் பிரதிநிதிகள், பச்சிலைப் பள்ளிப் பிரதேசசபைச் செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர், மாசார்க் கிராம அலுவலர், அப்பகுதி மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

தற்போது அப்பொதுநோக்கு மண்டப கட்டடவேலைகள் ஆரம்ப மாகின்றபோது, சிலர் அம் மண்டபம் அமையும் இடத்தில் குடியிருப்புக்கள் இல்லையென்றும், அதற்கான காணியைத் தாம் குடியிருப்பு உள்ள இடத்தில் தருகின் றோம் என்றும் கூறிஅதை அதில் கட்டவேண்டாம் என்று பச்சிலைப் பள்ளி பிர தேசசபைச் செயலாளர், பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர். மாசார்க் கிராமஅலுவலர் ஆகியோ ருக்குக் கடிதம் கொடுத்து அதை நிறுத்துமாறு கோரியுள்ளனர். தற் போது அதைவிட இன்னும் ஒரு சிலர் தாம் வேறு இடத்தில் காணி தருவதாகக் கூறி யுள்ளனர். என்ன செய்வதென்று தெரி யாமல் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைச் செயலாளர் திண்டாடுகின்றார். (11)

-மட்டு. சேத்துக் குடாவில்-

## புளொட் குழுவின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் படுகாயம்

மட்டக்களப்பு சேத்துக்குடா பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் நேற்று முன்தினம் மாலை புளொட் உறுப்பினர் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி 22 வயது இளைஞரொருவர் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். வீச்சுக் கல்முனையைச் சேர்ந்த ஜெயராஜா ராஜு என்ற இந்த இளைஞர் மட்டக்களப்பு வைத்தியசாலை சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் தொழில் புரிந்து வருகின்றார். வைத்தியசாலையிலிருந்து தனது வீட்டிற்கு துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த சமயம் உந்துருளியில் பின்தொடர்ந்து வந்த இரண்டு இளைஞர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இந்த இளைஞர்களில் ஒருவர் புளொட் அமைப்பைச் சேர்ந்த அலன் எனப் படுகாயமடைந்த இளைஞர் அடையாளம் கண்டுள்ளார். மட்டக்களப்பு விமானப் படை முகாம் பாதுகாப்பு வலயத்தை ஒட்டிய பிரதேசத்தில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### *பிள்ளைகளுக்கு உதவி*

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கின் உடுத் துறைக் கிராம அலுவலர் பிரிவில் சுனாமி ஆழிப்பேரலையினால் பெற் றோரை முழுமை யாகவும், தாய் அல்லது தந்தையரை இழந்த 51 பிள்ளைகளுக்கு ஒரு இலட்சத்து 53 ஆயிரம் ரூபாவினை வடமராட்சி வதிரி மக்கள் மன்றம் அண்மையில் வடமராட்சி கிழக்கு கடற்றொழி லாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசப் பணிமனையில் வைத்து வழங்கி யது. இந்நிகழ்வில் சமாச நிர்வாகத் தினர், கடற்றொழில் பரிசோதகர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (11)

# இந்திய மக்களவையில் காப்புரிமை மசோதா

# கடும் அமளிதுமளிக்கு மத்தியில் அறிமுகம்

(புதுடில்லி)

**இந்திய மக்களவையில் கடும் அமளிதுமளிக்கு நடுவில் புதிய காப்புரிமை மசோதா நேற்று முன்தினம் ஆளும்கட்சியினரால் அறிமுகப்படுத்தப்பட்டது.**

தற்போது காப்புரிமை திருத்தச் சட்டம்-(2004) நடைமுறையிலுள்ளது. இதை மாற்றி புதிய காப் புரிமை மசோதா ஒன்றை மக்களவையில் மத்திய அரசு நேற்றுக் கொண்டு வர முயன்றது. அதற்கு வர்க்கலா ராதாகிருஷ்ணன் என்.என. கிருஷ்ணதாஸ் (மா.க.கட்சி), பிரபோத் பண்டா (இந்.க.கட்சி), வீரேந்தி ரகுமார் (மதச்சார்பற்ற ஜனதாத்தளம்) ஆகியோர். கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். பா.ஜ.உறுப்பினர்களும் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். மத்திய அரசு இந்த மசோதாவைக் திணிக்க முயல்கிறது. பாராளு மன்றத்துக்கு ஒப்புக்கு தகவல் தெரிவிக்கிறது. பாராளுமன்றத்தை அதிகாரமுள்ள அமைப்பாக மத்திய அரசு கருதவில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டி னார்கள். இந்தப் புதிய காப்புரிமைச் சட்டம் நாட்டின் பொருளாதாரத்துக்கும், நலனுக்கும் ஆபத்தானது. என்று பிரபோத் பண்டா எதிர்ப்புத் தெரிவித்தார்.

ஆனால் சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி அதை கண்டு கொள்ளவில்லை. மசோதாவை நிறைவேற்ற வருமாறு மத்திய வர்த்தக அமைச்சர் கமல்நாத்துக்கு அழைப்பு விடுத்தார். இதையடுத்து கமல்நாத் புதிய காப்புரிமைச் சட்டத்தை அவையில் அறிமுகப்படுத்தினார். புதிய சட்டத்தில் பயப்படும்படியாக எதுவும் இல்லை. உலக வர்த்தக அமைப்பின் வர்த்தகம் தொடர்பான அனைத்து அறிவுச்சொத்துரிமையைக் காப்பாற்றுவதற்கான சட்டம் இது நாட்டின் அனைத்து விதமான தொழில் நுட்பங்களுக்கும் காப்புரிமை அளிக்கப்போகும் இந்தப் புதிய சட்டத்தால் நாட்டுக்கு எந்த பிரச்சினையும் வராது. இந்தச்சட்டம் குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவர்களது கருத்தைத் தெரிவிக்க வாய்ப்பு அளிக்கப்படும் என்று கமல்நாத் தெரிவித்தார்.

ஆனால் அவை உறுப்பினர்கள் பலர் அதை ஏற்க வில்லை. பா.ஜ. மற்றும் இடதுசாரி உறுப்பினர்கள் கமல்நாத்துக்கு எதிராக குரல் எழுப்பினார்கள். மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கிருஷ்ணதாஸ் அமைச் சரை நோக்கி ஓங்கி கத்தினார்.

இந்நிலையில் சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி குறுக் கிட்டு சட்டம் அறிமுகம் ஆகிவிட்டது. இது பற்றி பின்னர் விவாதம் நடைபெறும் என்று அறிவித்தார் அதையடுத்து அமளி ஓய்ந்தது.

# தமிழகம்,கர்நாடக அரசுகளுக்கு தே.ம.உ.ஆணையகம் இறுதிக்காலக்கெடு

வீரப்பனைத் தேடும்போது அதிரடிப்படை வீரர்கள் மக்களைக் கொடுமைப்படுத்தியதாகக் கூறப்படும் விவகாரத்தில் பதிலளிக்குமாறு தமிழக மற்றும்கர்நாடக அரசுகளுக்கு தேசிய மனித உரிமை ஆணையகம் இறுதிக் கெடு விதித்துள்ளது.வீரப்பன் வேட்டையில் தமிழக கர்நாடக அதிரடிப்படை ஈடுபட்டது. அப்போது அதிரடிப்படை வீரர்கள் மக்களிடம் மூர்க்கத்தனமாக நடந்துகொண்டதாகவும்,அப்பாவி மக்களைக் கொடுமைப்படுத்தியதாகவும் புகார் எழுந்தது. இது பற்றி விசாரிக்க நீதிபதி சதாசிவம் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு விசாரணை நடத்தி தேசிய மனித உரிமை ஆணையகத்திடம் 2003 ஆம்ஆண்டு டிசம்பரில் அறிக்கை தாக்கல் செய்தது. இதற்குப் பதில் அளிக்குமாறு தமிழக கர்நாடக மாநில அரசுகளுக்கு தேசிய மனித உரிமை ஆணையகம் கட்டளை அனுப்பியது. மூன்று முறை நினைவூட்டல் கடிதமும் அனுப்பியது. ஒரு ஆண்டுக்கு மேலாகியும் தமிழக கர்நாடக மாநில அரசுகள் இன்னும் பதில் கூறவில்லை. இதையடுத்து இறுதிக்காலக்கெடு விதித்து கடிதம் அனுப்பியுள்ளது.

# இந்தியாவில் பணவீக்கம் உயர்வு

(புதுடில்லி)

சிமெண்ட் மற்றும் சமையல் எண்ணெய் விலை உயர்வு காரணமாக மார்ச் ஐந்தாம் திகதியோடு முடிவடைந்த வாரத்தில் நாட்டின் பணவீக்க விகிதம் 5.30 சதவீதமாக உயர்ந்துள்ளது.பணவீக்கம் முந்தைய வாரத் தில் 4.59 சதவீதமாகவும், கடந்த ஆண்டின் இதே வாரத்தில் 4.97 சதவீதமாகவும் இருந்தது.இந்த வாரத்தில் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை பெரலுக்கு 55டொலர்களைத் தாண்டியது. கோப்பித்தூள், தவிட்டு எண்ணெய்,சர்க்கரை,கடலை எண்ணெய், இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெய்,சிமெண்ட் போன்றவற்றின் விலைகள் உயர்ந் திருந்தன.

இதனாலேயே பணவீக்கம் உயர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.



குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடிக்கு அமெரிக்க விசா வழங்க மறுத்ததைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்திய பாரதிய ஜனதாக் கட்சி ஆதரவாளர் ஒருவரை கைது செய்துகொண்டு செல்லும் பொலிசார்.

# குஜராத் கடலில் பாக்.தீவிரவாதிகள் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல்

## ஆறு மீனவர்கள் காயம்

குஜராத் கடற் பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீன வர்களை பாகிஸ்தான் தீவிரவாதி கள் வெட்டியுள்ளனர். இச்சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட மீனவர்களில் ஒருவர் தெரிவிக்கையில்,

குமரி மாவட்டம் தூத்தூர் மீனவ கிராமத்தைச் சேர்ந்த சூசை நாயகம் (வயது-36) இவருக்குச் சொந்தமான விசைப்படகில் ஜார்ஜ் (வயது 40), மோதாசன் (வயது-37), அனி(வயது22), சேகர்(வயது-19),அந்தோணி (வயது-22),ஸ்டனோ (வயது-17) ஆகியோர் குஜராத்தில் உள்ள ஜீனாக்காடு மாவட்டத்தில் உள்ள வேராவல் என்ற இடத்தில் தங்கி அங்குள்ள கடற் பகுதியில் மீன் பிடித்து வந்த தோம். அப்போது நடுக்கடலில் எட்டுப் பேர் கொண்ட குழுவினர் படகு ஒன்றில் வந்து எமது படகை வழிமறித்தனர்.

பின்னர் பயங்கர ஆயுதங்களு டன் படகில் புகுந்து சிறுவன் ஸ்டனோவை மட் டும் விட்டு விட்டு மற்ற ஆறு மீனவர்களையும் சரமாரியாக வெட்டிச் சாய்த்தனர். இதில் ஆறு மீனவர்களும் படகில் ரத்த வெள்ளத்தில் சாய்ந்தனர். ரத்தக் காயங்களுடன் இருந்த எங்களை அந்த மர்ம மனிதர்கள் மீன்கள் பதப்படுத்தும் அறையில் அடைத்து வைத்து மிளகாய்ப் பொடியைத் தூவி துன் புறுத்தியுள்ளனர்.

பின்னர் அந்தக் கும்பல்கள் தாங்கள் பாகிஸ்தான் தீவிரவாதிகள் என்று கூறிவிட்டு படகில் சென்றுவிட்டனா. படகில் வெட்டுக் காயங்களுடன் கிடந்த ஆறு மீனவர்களை சிறுவன் ஸ்டனோ தான் படகை ஓட்டி வந்து கரையில் சேர்த்தான். கரையில் இருந்தவர் களின் உதவியுடன் எம்மை மருத் துவமனையில் சேர்த்தான். பிறகு நடந்த சம்பவம் குறித்து தூத்தூர் கிராமத்துக்குத் தகவல் கொடுத் துள்ளான் என்றார்.

# ஐ.நா.வுக்கு இந்தியர் போட்டி

ஐ.நா.பொதுச் செயலாளர் பதவிக்கு முதன்முறையாக இந்திய வம்சா வழியைச் சேர்ந்த ஒருவர் போட்டியிடுகிறார். அவரது பெயர் நீரஜ்தேவா ராஜஸ்தானைப் பூர்வீகமாகக் கொண்டவர். தற்போது லண்டனில் வசிக்கிறார். 1992 ஆம் ஆண்டில் இருந்து இங்கிலாந்து பாராளுமன்றத்தில் எம்.பி.யாக இருக்கிறார். 1999 ஆம் ஆண்டு முதல் ஐரோப்பிய பாராளுமன்றத்துக்கான இங்கிலாந்து உறுப்பினராகவுள்ளார்.

தற்போது இங்கிலாந்து வெளிவிவகாரக் கமிட்டி உறுப்பினராகவும், வளர்ச்சி ஒத்துழைப்புக்கான கமிட்டியின் ஒருங்கிணைப்பாளராகவும் பணி புரிகிறார்.

# கலப்புச் சொற்களுக்குப் பதிலான தமிழ்ச்சொற்கள்

## பா.ம.க விளம்பரப்பலகை வைக்கிறது

பேச்சுவழக்கில் பயன்படுத்தப்படும் கலப்புச் சொற்களுக்கு (ஆங்கிலம்) தமிழ்ச்சொற்கள் கொண்ட பெரிய அளவிலான விளம்பரப்பலகைகளை பா.ம.க ஞாயிற்றுக்கிழமை திறக்கிறது.

பொதுமக்கள் கூடும் இடங்களில் சென்னையில் 120 இடங்களிலும் அனைத்து மாவட்டங்களிலும் 750 இடங்களிலும் இந்த விளம்பரப்பலகைகள் திறக்கப்படும். சென்னையில் பா.ம.க நிறுவனர் ராமதாஸ்,தலைவர் கோ.க.மணி,ஆ.கி.மூர்த்தி ஆகியோர் விளம்பரப் பலகைகளைத் திறந்து வைக்கின்றனர்.

# தமிழகத்தில் தொடருந்து மோதி 80 செம்மறி ஆடுகள் மாண்டன

## தொடருந்து நிர்வாகத்திடம் நஷ்டஈடு கோருகிறார் மேய்ப்பன்

இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடியைச் சேர்ந்தவர் வேலு. நேற்று முன்தினம் காலை இவர் தனது 120 செம்மறி ஆடுகளையும் மேய்ச்சலுக்கு ஓட்டிச் சென்றார். 9.15 மணி அளவில் சமயபுரம் பக்கமுள்ள கூத்தூர் மேம்பாலத்துக்கு அடியில் ஆடுகள் சென்றபோது திருச்சியில் இருந்து லால்குடி நோக்கி தொடருந்து ஒன்று வந்தது. அப்பொழுது தண்டவாளத்தில் மேய்ந்து கொண்டிருந்த80 ஆடுகள் தொடருந்தில் அடிபட்டு அந்த இடத்திலேயே இறந்தன.

இறந்துபோன ஆடுகளின் உடல்கள் ஏறத்தாழ 30 அடி தூரம் இழுத்துச்செல்லப்பட்டு துண்டு துண்டுக ளாகக் கிடந்தன. இதனால் அந்தப்பகுதி முழுவதும் ரத்தமாகக் காட்சி அளித்தது. 40 ஆடுகள் இந்த விபத் தில் இருந்து தப்பின.இறந்த ஆடுகள் ஒவ்வொன்றும் 1500 முதல் 2000 ரூபா வரை இருக்கும் . எனவே 80 ஆடுகளின் மதிப்பு ஒன்றரை இலட்சத்துக்கும் மேல் இருக்கும். தனது கண்முன்னாலேயே 80 ஆடுகளும் தொடருந்தில் அடிபட்டுக் கோரமாக இறந்ததைப்பார்த்த வேலு கதறி அழுதார்.

இச்சம்பவம் குறித்து வேலு கூறியதாவது, 30 ஆண்டுகாலம் கஷ்டப்பட்டு இந்த ஆட்டு மந்தையை நடத்தி வந்தேன். ஐந்து ஆடுகளை வைத்து மந்தையைத் தொடங்கி இன்றைக்கு 120 ஆடுகளாக ஆக்கினேன். ஆனால் ஒரே நேரத்தில் 80 ஆடுகள் சின்னாபின்னமாகி விட்டதே. ஆடுகள் தொடருந்தில் அடிபட்டு இறந்திருந்தாலும் பரவாயில்லை. தொடருந்து இயந்தி ரம் மட்டும்தான் சென்றது. அந்த இயந்திர சாரதி ஒலி எழுப்பி இருந்தால் ஆடுகள் கலைந்து ஓடி இருக் கும். திடீரென எமன் போல வந்து எனது ஆடுகளைக் காவுகொண்டுவிட்டது. இதற்காக எனக்கு தொடருந்து நிர்வாகம் நஷ்டஈடு தரவேண்டும்.இல்லாவிட்டால் நான் குடும்பத்தோடு சாகவேண்டியதுதான் என்றார்.

தொடருந்தில் அடிபட்டு இறந்து கிடக்கும் ஆடுகளைப் படத்தில் காணலாம்



# நகரங்களில் குரங்குகளுக்கு உணவு வழங்கத் தடை



இந்தியாவில் நகர்ப்புறங்களில் குரங் குகளுக்கு உணவு வழங்குவதைத் தடைசெய்ய உச்ச நீதிமன்று யோசனை கூறியுள்ளது.

டில்லி போன்ற பெரு நகரங்களில் குரங்குகளின் தொல்லை அதிகரித் துள்ளதையடுத்து இப்பிரச்சினைக் குத் தீர்வுகாண வேண்டுமென உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட் டது. எனவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஒரு செயல் திட்டத்தைத் தயாரித்து நீதிமன்றில் சமர்ப்பிக்கு மாறு மத்திய அரசிற்கு உச்ச நீதி மன்று உத்தரவிட்டது.

இதையடுத்து மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை சார்பில் ஒரு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு உச்சநீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. அதன்படி காடுகளில் வசிக்கும் குரங்குகள் உணவு தேடி நகர்ப்புறங்களுக்கு வருகின்றன. நகர மக்கள் அந்தக் குரங்குகளுக்கு உணவு கொடுத்து உற்சாகமூட்டுவதால் அவை ஊருக்குள்ளேயே தங்கி தொல்லை கொடுக்க ஆரம்பித்து விடுகின்றன.

இந்தத் தொல்லைக்கு முடிவு கட்ட வேண்டுமானால், குரங்குகளுக்குப் பொது மக்கள் உணவு கொடுப்பதைத் தடுக்க வேண்டும். அதற்கு சட்டம் கொண்டு வரவேண்டும். அந்தந்த நகரசபைகள் இந்தத் தடைச் சட்டத்தை அமுல்படுத்தி நடவடிக்கை எடுக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாயகத்தின் தேவைக்கேற்ப ஆய்வுகள் வளப்படுத்தப்பட வேண்டும்!



சகாதேவன்

விவசாயம், மற்றும் அறிவியல் தொடர்பான புதிய கண்டு பிடிப்புக்களையும், புதிய இன விவசாய உள்ளீடுகளையும் கண்டு பிடித்து வருகிறேன். இக்கண்டு பிடிப்புகளை அபிவிருத்தி செய்ய துறைசார்ந் தவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கு மானால், மேலும் இவற்றை விரைவு படுத்தமுடியும்.இவ்வாறு உறுதிப் படக் கூறுகிறார் புதுக்குடியிருப்பு கைவேலியைச் சேர்ந்த விநாயக மூர்த்தி சகாதேவன் என்பவர். இவர் பலவகையான புதிய இனத் தாவரங்களை உருவாக்குவது மற்றும் புதிய ரக நெல்லினங்களை உருவாக்குதல் மற்றும் தமிழீழ நிலப் பிரதேசத்திற்கும் காலநிலை க்கும் பொருத்த மற்றதெனக் கருதக்கூடிய தாவரங்களைக்கூடப் பயிரிடுதல் போன்ற செயற் பாடுகளில் ஈடுபட்டு வெற்றிகண்டவர். அத்தோடு இந்திய ஆய்வு நிறுவன மொன்றில தாவரக் கலங்களி லிருந்து தாய்த்தாவரத்தை ஒத்த தாவரங்களை உருவாக்கும் பயிற்சி நெறியினையும் கற்றுள்ளார். அத்தோடு 1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அரிக்கன் விளக்கின் வெப்பத்தைக் கொண்டு ஒரே தட வையில் 800 வரையான முட்டை களைப் பொரிக்க வைத்து கோழிக் குஞ்சுகளை உருவாக்கியவர்.

இவரின் கடந்த கால ஆய்வுகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் தொடர்பாகவும். தற்போது இவர் மேற்கொண்டுள்ள மாற்றீடான எரிபொருள் உற்பத்தி முயற்சி தொடர்பாகவும் இவரை சந்தித்துக் கேட்டோம்.

*** நீங்கள் விவசாயம் சம்பந்த மாகவும், ஏனைய துறைகள் சம்பந்தமாகவும் பல ஆய்வுகளை மேற்கொண்டதாக அறிந்தோம். இவற்றில் நீங்கள் முதன் முதலாக என்ன வகையான ஆய்வில் ஈடுபட் டீர்கள்.?**

1994 ஆம் ஆண்டு மரவள்ளிக் கிழங்கின் ஒரு புதிய இனத்தைக் கண்டுபிடித்தேன் அதாவது பர்மா போன்ற நாடுகளில் நிழல் மரவள் ளியை உணவுக்குப் பாவித்ததாகத் தகவலறிந்திருந்தேன். இது நிறைய விளைச்சலையும் தரும். நோய்த் தாக்கமும் குறைவு. ஆனால் சாதாரண மரவள்ளிக்கு நோய்த் தாக்கம் அதிகம். அத்தோடு பயன் பாட்டிலும் உள்ளது. இவ்விரண்டு மரவள்ளியையும் கலப்பினம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டேன். இதில் உற்பத்தியாகிய கிழங்குகள் பெரியனவாகவும், வயது குறைந்த இனமாகவும் ஓர் இனம் கிடைத்தது. 1994 ஆம் ஆண்டு இது முழுமையாக வெற்றியளித் திருந்தது. பின்னர் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையால் அதன் துண்டங்கள் கைவிடப்பட்டு விட்டன. மீண்டும் இங்கு அதை உருவாக்க முயற்சிக்கவில்லை. ஏனெனில் அதை உருவாக்க எனக்கு 4 ஆண்டுகள் எடுத்தது. மீண்டும் ஒரு 4 ஆண்டுகளை அதற்கு செலவிட எனது பொருளாதார நிலை இட மளிக்கவில்லை.

***அடுத்த கட்டமாக நீங்கள் எவ்வகையான ஆய்வினை மேற் கொண்டீர்கள்.?**

அடுத்து 1996 ஆம் ஆண்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பணிப்பிற்கமைவாகத் தாய்க்கோழி இல்லாமல் முட்டை களில் குஞ்சு உருவாக்கும்



கலங்களிலிருந்து தாவர உற்பத்திக்கான ஆய்வு

முயற்சியில் ஈடுபட்டேன். அதாவது அரிக்கன் இலாம்பிலிருந்து வெளி யேறும் வெப்பத்தைக் கொண்டு முட்டைகளை அடைவைக்கும் முயற்சியில் ஈடுபட்டேன். முதற் கட்டமாக 30 முட்டைகளை வைத்துப் பரிசீலித்தபோது அது வெற்றியளிக்கவில்லை மீண்டும் தொடர்ந்து முயற்சியில் ஈடுபட்டதன் விளைவாக அது வெற்றியளித்தது. இதன்னத் தொடர்ந்து ஒரு இலாம்பின் உதவியுடன் 800 முட்டைகளை அடைவைக்கும் முறையினையும், அதற்கான சாதனத்தினையும் கண்டு பிடித் தேன். இவைபூரண வெற்றியும் அளித்தது.

**இப்போதைய சூழலில் இது போன்ற ஒரு சாதனத்தை உரு வாக்கமுடியுமா?**

ஆம். இப்போது மின்சாரம் எமக்கு ஓரளவு கிடைப்பதனால் மின் குமிழின் வெப்பத்தைப் பயன்படுத்தி இவ்வாறான இலகுவானஒரு பொறியை உருவாக்கமுடியும்.

*** இதனைத் தொடர்ந்து நீங்கள் மேற்கொண்ட ஆய்வு என்ன? அது எந்த அளவிற்கு வெற்றியளித்தது?**

அடுத்ததாக நான் உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்திப் பத்தாம் இலக்க ஒயிலை உருவாக் கியிருந்தேன். இது பொருளாதாரத் தடை அமுலில் இருந்த காலத்தில் மிக முக்கியமான தேவைகளுக் கெல்லாம் பயன்படுத்தப்பட்டது. குறிப்பாகக் கருவிகளைச் சுத்திகரிப் பதற்கு இது மிகவும் பொருத்த மானது. இதற்காகப் பயன்படுத்த முடியுமென்ற சான்றிதழ் ஒன்றும் குறித்த துறையினரால் எனக்கு வழங்கப்பட்டது.

தொடர்ந்துமரக்கறி எண் ணெய்யை உற்பத்தி செய்கின்ற தாவரத்தினைத்தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உதவி யுடன், விதைகளை இந்தியா விலிருந்து பெற்று இங்கு நடுகை செய்திருந்தோம். மலேசியா விலிருந்து வந்த நிபுணர்குழு இதைப் பார்வையிட்டு மலேசியாவை விட இங்கு தரமாகவுள்ள தாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

*** மூங்கில் உற்பத்தியில் நீங்கள் தீவீரமாக ஈடுபட்டதாக அறிந்தோம் அது பற்றிக் கூற முடியுமா.?**

அதாவது மூங்கில் கட்டட வேலைகளுக்கு மிகவும் பயனுடைய ஒரு பொருள். இதை விடப் பல்வேறு பயன்பாடுகளையும் பெறக்கூடியது. எமது பகுதியில் சிறியளவில் காணப்பட்ட இம்மூங்கில் பூக்கத்தொடங்கியது. பூத்தவுடன் இவை அழிவடைந்து விடும். "சீனாவில் மூங்கில் பூக்கும் காலங்களில் பண்டாக் கரடி இனமும் அழிவடைந்து வருவதும் நாம் அறிந்ததே. ஆகவே இதற் கிடையில் இதன் விதையை எடுத்து நான் ஆயிரக்கணக்கில் நாற்றுக் களை உருவாக்கி உதவி அரசஅதிபர்கள்,அரசாங்க அதிபர் களின் துணையுடன் மக்களுக்கு



சந்தன மரஉற்பத்தி



மூங்கில்

வழங்கி இதனை மீள் உற்பத்தி செய்ய முயற்சி எடுத்து ஓரளவு வெற்றியும் கண்டேன். இம் மூங்கில் இலங்கையில் அழிவுக்குள்ளாகும் இனம் என்பதால் இது பாதுகாக்கப் படவேண்டுமெனவும் யுனெஸ் கோவினால் பிரகடனம் செய்யப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்க தொன்று.

*** இதனைத் தொடர்ந்து நீங்கள் என்ன ஆய்வில் ஈடுபட்டுள்ளீர்கள்?**

அடுத்து நான் இந்தியா சென்று தாவரக்கலங்களில் இருந்து தாய்த்தாவரத்தை ஒத்த தாவரத்தை உருவாக்கும்முறையைக் கற்றறிந் துள்ளேன்.

இதனைப் பயன்படுத்தி இங்கு பனையினை நாங்கள் உற்பத்தி செய்யலாம் ஏனெனில் பனையில் ஆண்பனை, பெண்பனை என்ற பாகுபாடு இருப்பதனால் ஒரே இனத் தைக் கூடுதலாக உற்பத்தி செய்வதற்கு இம்முறை மிகவும் பொருத்தமானது அத்தோடு தாவரத் தின் சிறியதுண்டத்திலேயே பல மில்லியன் கணக்கான தாவரங் களை உருவாக்க முடியும். இம் முறையினைக் கையாண்டால் மட்டுமே பனை அபிவிருத்தியை நாங்கள் நிறைவாக மேற்கொள்ள முடியும்.

*** இவ் ஆய்வினை மேற் கொள்ளபக்க உதவிகள் கிடைக்கு மானால் இதில் பூரண வெற்றி காண முடியுமென்ற நம்பிக்கை உங்களுக்கு உள்ளதா?**

நிச்சயமாக உள்ளது. இவ்வாய் விற்குத் தேவையான வசதிகள் செய்து தரப்படுமானால் பெருந் தொகையான உற்பத்திகளை மேற் கொள்ள முடியும்.

இப்போது நான் புதிய நெல்லினம் ஒன்றை உருவாக்கு வதில் ஈடுபட்டு வருகிறேன். அதாவது வெள்ளைப் பாசுமதி யையும், சாதாரண சிவப்பு இன நெல்லின் மகரந்தத்தையும் கலப்புச் செய்து ஒரு சிவப்புப் பாசுமதி இனத்தை உருவாக்கி வருகிறேன். இதன்மூலம் பாசுமதி அரிசியையும், சிவப்பு அரிசியையும் விரும்பி உண்போருக்கு ஒரேநேரத்தில் இரண்டும் கலந்த சுவையுடைய உணவு வழங்கமுடியும்.

*** இதனுடைய விளைச்சல் ஏனைய நெல்லினங்களோடு ஒப்பிடக்கூடியளவு உள்ளதா?**

ஆம் அதைப்போன்ற விளைச் சலைப்பெறக்கூடியதாக உள்ளது. இன்னும் இரண்டு வருடத்திற்குள் இவ்வினத்தை என்னால் வெளியீடு செய்யமுடியும்.

*** மாற்றீடான எரிபொருள் ஒன்றினை உருவாக்க முனைந்து வருகிறீர்கள் என அறிந்தோம் அது தொடர்பாகக் கூறமுடியுமா?**

ஆம் பெருகிவரும் மின்சக்தித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக சிறியளவு மின்பிறப்பாக்கிகளை இயங்கவைக்கக் கூடிய டீசலுக்கு மாற்றீடான ஒரு எரிபொருளை உற் பத்தி செய்வதில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறேன். அதாவது காட்டா மணக்கு எண்ணெயிலிருந்து பெறப்படும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி அதனோடு சில தாவங்களின் மூலப்பொருட் களையும் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றேன். இதனை டீசலுக்குப் பதிலாக எரிபொருளாக டீசலை விடக் குறைந்த செலவில் உற்பத்தி செய்யமுடியும் என்ற ஆராய்ச்சி யினை அமெரிக்கா போன்ற நாடுகளில் செய்யப்பட்டு இன்று பிரிட்டனிலுள்ள நிறுவனம் ஒன்று இந்திய தமிழ்நாட்டுத்தரிசு நிலங்களில் காட்டாமணக்குப் பயி ரைப் பயிரிட்டு அதற்கான உற்பத்தியை, சந்தைப்படுத்து வதற்கான ஒப்பந்தத்தைக்கூட தமிழ் நாட்டு முதலமைச்சர் ஜெயல லிதாவுடன் சேர்ந்து மேற்கொண்டுள ளனர்.

இதேபோன்ற உற்பத்தியைத் தான் இங்கும் மேற்கொள்ளவுள் ளேன. ஆனால் இதற்கான ஊக்குவிப்பு எனக்குக்கிடைக்கு மானா இப்போது அதனை முழுமையாக உற்பத்திசெய்திருக்க முடியும். ஆனாலும் எனது தனிப் பட்ட முயற்சியால் இதனை இப் போது மேற்கொண்டு வருகிறேன். இவ்வாறு இலகுவாகக் கிடைக்கும் இவ் எரிபொருளைப் பயன்படுத்தி தனிமைப்படுத்தப்பட்ட. ஒரு கிராமத்திற்கு மின்னை வழங்கக் கூடிய இயந்திரத்தை இயங்க வைக்கமுடியும். நான் தற்போது ஐயாயிரம் வொற்ஸ் தரக்கூடிய சாதனத்தை வடிவமைத்து வருகிறேன். ஒரு ஏக்கரில் இருந்து கிடைக்கும் தாவர மூலப்பொருளி லிருந்து எவ்வளவு எரிபொருளைப் பெறமுடியும் எனவும், அதை எவ்வாறு பயன்படுத்துவதெனவும் இப்போது ஆய்வு செய்துவருகி றேன். இது வெற்றியளித்தபின் சோலருக்குப்பதிலாக இதனைப் பயன்படுத்தி மின்னை வழங்க முடியும். குறிப்பாக இரண்டு கிலோ தாவரக்கழிவுப்பொருள் ஒரு லீற்றர் டீசலுக்கு இணையான சக்தியை வழங்கக்கூடியதான பயனைத்தரும். இதற்கு "பயோமாஸ் எலக்ரிசிற்றி புறொஜெக்ட்" எனப்பெயரிட்டுள் ளேன். அதாவது எந்தத் தாவரக் கழிவுப்பொருளில் இருந்தும் குறிப் பாக உமியிலிருந்து கூட இரண்டு கிலோ நிறையிலிருந்து ஒரு லீற்றர் டீசலின் சக்திக்கேற்ப இயக்க முடியும்.

* இவ்வாறு தனது ஆய்வு களையும், உற்பத்திகளையும் மேற்கொண்டு வரும் இவருக்குப் பொருளாதார ரீதியில் உதவிகள் கிடைக்கப்பெறுமானால் தான் முழு மையாக இதுபோன்ற ஆய்வு களில் ஈடுபடமுடியுமெனவும் குறிப் பிடுகிறார்.

**நேர்காணல்**
**இ.சசிக்குமார்**
**வீ.பிரதீபன்**

அத்தோடு சந்தனமர உற்பத் தியையும் மேற்கொள்ளக்கூடிய ஆய்வில் இவர் ஈடுபட்டு பரீட்சார்த் தமாக சந்தனமரங்களை நடுகை செய்தும் வருகிறார்.

தமிழர் தாயகத்தைப் பொறுத்த தவரையில் இவ்வாறான ஆய் வாளர்கள் ஊக்குவிக்கப் படு வார்களேயானால் அந்நியச் செலா வணியைக் குறைத்து அபிவிருத் தியை நோக்கிய பாதையில் தமிழீழத்தை விரைவாக நடை போடவைக்கமுடியும்.

# புலிகளின் விமானப்படை குறித்து 1998 இல் விடுக்கப்பட்ட எச்சரிக்கை

**வேலவன்**

1998 டிசம்பர் மாதமளவில் சிறிலங்கா அரசாங்கம் பிரசுரம் ஒன்றை வெளியிட்டது.அது எல்லா சிறிலங்கா பொலிஸ் நிலையங்களுக்கும். இராணுவ முகாம்களுக்கும்,கொழும்பிலுள்ள அனைத்துச் சோதனைச் சாவடிகளுக்கும், குறிப்பாக பாராளுமன்றத்தைச் சூழவுள்ள சோதனைச் சாவடிகளுக்கும் வழங்கப்பட்டது. இந்த வர்ணப் பிரசுரம் அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டிருந்தது.

இதிலே சிறிலங்கா விமானப்படையிடமிருந்த 15 வகை விமானங்களின் படங்களும் விடுதலைப் புலிகளிடம் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும். உலங்கு வானூர்தியின் வகைப் படமும் விமானமொன்றின் வகைப்படமும் , இடம்பெற்றிருந்தன. அதிலே புலிகளடம் ஒரு உலங்கு வானூர்தியும், இரண்டு இலகுரக விமானங்களும் இருப் பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

தற்செயலாக புலிகளின் வானூர்திகள் தாக்குதல் நடத்த முயன்றால் அவற்றை சிறிலங்கா விமானப்படை விமானங்களிலிருந்து பிரித்தறிந்துதாக்க இலகுவாகவே இந்தப் பிரசுரம் வெளியிடப்பட்டிருந்தது. இந்தப் பிரசுரம் படைநிலைகள் அனைத்திலும் சட்டமிடப்பட்டுப் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகள் தொடர் பாக அவதூறு செய்வதற்குக் காலத்திற்குக் காலம் சிங்கள இனவாத அரசுகளுக்கும், இனவாதிகளுக்கும், ஊடகங் களுக்கும் ஏதாவது தேவைப் பட்டுக் கொண்டே இருக்கின்றது. தங்களுடைய படுமோசமான மனிதாபிமானமற்ற நடவடிக் கைகளை மூடிமறைக்கவும், விடுதலைப் புலிகள் தொடர்பான நல்லபிப்பிராயம் வளர்வதைத் தடுக்கவும் இவர்கள் ஏதாவ தொன்றைக் கூறிக்கொண்டே இருப்பார்கள்.

இந்தவகையில் அவர்களின் புதிய ஆயுதம்தான் புலிகளின் விமானப்படை குறித்த செய்தியாகும். ஆனால் புலிகளின் விமானப்படை ஒன்றும் புதிய விடயமல்ல என்பதை அவர்களே முன்னர் இவ்வாறு தெரிவித்த கருத்துக் களில் இருந் தும். இனவாத ஊடகங்களும், படையினரும் இணைந்து வெளியிட்ட செய்திகளிலிருந்தும் அறிந்துகொள்ள முடியும்.

1998 இல் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அப்பொழுது குடியிருந்த அலரிமாளிகையின் மேற்தளம் உட்பட சுற்றிவர விமான எதிர்ப்பு ஏவுகணைகள் பொருத்தப்பட்டிருந்தன. அதே போல பாராளுமன்ற வளாகம், படைத் தளங்கள் என்பனவற்றிலும் முன்னெச்சரிக்கையாக விமான எதிர்ப்புப் பீரங்கிகள் பொருத்தப்பட்டிருந்தன.

1998 நவம்பர் மாதம் 2 ஆம் திகதி அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படையின் கொமாண் டோப் பிரிவு ஒன்று அக்கரைப் பற்றிலிருந்து கஞ்சிகுடிச்சாறு காடு நோக்கி நகர்ந்து கொண்டிருந்தபோது புலிகளின் கட்டுப் பாட்டுப்பகுதியில் உலங்கு வானூர்தி ஒன்று இறங்கும் ஓசை கேட்டதாக அறிக்கையிட்டிருந்தது.

அதேவேளை மட்டக்களப்பு தாந்தா மலையிலும் உலங்கு வானூர்தி ஒன்று தரையிறங்கியதாக இராணுவத்தினருடன் இணைந்து இயங்கிய ஆயுதக் குழு ஒன்று தெரிவித்தது.

அதேவேளை அந்த வருடம் ஒக்ரோபர் மாதத்திலேயே சண்டே ரைம்ஸ் பத்திரிகைகளில் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் விடுதலைப்புலிகளிடம் உலங்குவானூர்தி அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உலங்கு வானூர்திகள் இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளதாகக் கட்டுரை ஒன்றில் தெரிவித்திருந்தார்.

அதாவது ஆளில்லா வேவு விமானங்கள் வழங்கிய தகவலின்படி புலிகள் முல்லைத்தீவுத் தளத்தை அண்மித்ததாக விமானத் தளமொன்றை அமைந்திருப்பதாகவும், உலங்கு வானூர்திகளை அவர்கள் வைத்திருப்பதாவும் உறுதிசெய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இதேவேளை சிறிலங்காப் புலனாய்வுத் தகவல்களை அடிப் படையாகக் கொண்டு லங்காதீப சிங்கள நாளிதழ் தகவல் தருகையில் புலிகள் முல்லைத் தீவுக்கான ஆயுத விநியோ கத்தை வான் மார்க்கமாக மேற் கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்தது. அத்துடன் வன்னியில் புலிகளால் அமைக்கப்பட்ட விமான ஓடு பாதை ஒன்று சிறிலங்கா விமானப்படையால் தாக்கியழிக்கப்பட்டதாகவும், புலனாய்வுத்தகவல்கள் கூறுவதாகவும் லங்காதீப செய்தி வெளியிட்டிருந்தது.

இதைவிட 1990களில் முற்பகுதியில் சிறிலங்காவின் சனாதிபதியாக டி.பி விஜயதுங்க பதவி வகித்த காலத்தில் கூட புலிகளிடம் மைக்ரோலைற் விமானம் இருப்பதாக சிறிலங்கா படைத்தரப்பு செய்திகளை வெளி யிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

இது புலிகள் குறித்த அச்சவுணர்வை சிங்கள மக்கள் மத்தியிலே ஏற்படுத்தவும் புலிகள் அழிக்கப்படாவிட்டால் இவ்வாறு படிப்படியாக வளர்ந்துகொண்டு சென்று நாட்டைப் பிளவுபடுத்திவிடுவார்கள் என்ற கருத்தை ஏற்படுத்தவும் அன்று பரப்பப்பட்டன.

அதாவது சிறிலங்காவின் பொருளாதாரத்தைப் படிப்படி யாகச் சிதைத்து வந்த யுத்தம் சிங்கள தேசத்துக்கு அவசிய மானது என்பதை வலியுறுத்த அவர்கள் இவ்வாறு வெளிப் படுத்தி வந்தனர்.


இவ்வாறு புலிகளிடமுள்ள விமானப்படை குறித்து செய்திகளை வெளிப்படுத்தி வந்த அதே இனவாத ஆட்சியா ளர்கள், இன்று அதனை வேறொரு விதமாகப் பயன்படுத்த முற்படுகின்றனர். அதாவது முன்னர் புலிகளிடம் வானூர்திகள், விமானப்படை, ஓடுதளம் என்பன இல்லை என்பது போலவும் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னரே அது கட்டி எழுப்பப்பட்டது போலவும் காட்டுவதற்கு அவர்கள் முயல்கின்றனர்.

அதவாது புலிகள் சமாதானத்தின் விரோதிகள்.அவர்கள் யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபடுகின்றனர் என்பது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்த முயல்கின்றனர்.

புலிகள் தம்மிடமுள்ள விமானப்படை குறித்து 1998 மாவீரர் தினத்தன்று பிரகடனம் செய்து விட்டனர்.

பின்னர் அவர்கள் பாரிய, இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு- அதாவது ஓயாத அலைகள்- 03 மூலம் பாரிய வெற்றியையீட்டி தமது இராணுவ பலத்தை நிரூபித்துக் காட்டினர். "அக்கினிச்சுவாலையை" தோற்கடித்தனர். சிறிலங்காவின் தலைநகரை ஆட்டம்காணச் செய்து. பொருளாதார ரீதியில் பலமிழக் கச் செய்தனர்.

சிறிலங்காவில் சமபலமுள்ள சக்திகள் தாங்கள் என்பதை நிரூபித்துக்காட்டினர் இந்த சமபலத்தின் அடிப்படை யிலேயே இன்றைய சமாதான சூழல் ஏற்பட்டது என்பதை சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த சமபலம் அல்லது இராணுவச் சமநிலை உடைந் துவிடும் என்று கூறிக்கொண்டு தான் யாழ்ப்பாணத்திலும், ஏனைய பல பகுதிகளிலுமுள்ள அதி உயர் பாதுகாப்பு வலயங் களை அகற்றி மக்களைக் குடியமர அனுமதிக்க சிறிலங்கா ஆளும்தரப்பு மறுத்துவருகின்றது.



புலிகளின் வானூர்திகள் குறித்து 1998 இல் அரசு வெளியிட்ட பிரசுரத்தின் ஒரு பகுதி

ஆனால் தம்மைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் அரசு தீவிர மாகத் தடையின்றி ஈடுபடு கின்றது. பாதுகாப்புச் செலவினத்தை அது எவ்வகையிலும் குறைத்துக்கொள்ளவில்லை. பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை இந்தியாவுடன் செய்துகொள்வது குறித்து அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தீவிர முயற்சி ஒன்றில் ஈடுபட்டு வருகின்றார். பல்வேறு நாடுகளுக்கும் படையினர் பயிற்சிபெற அனுப்பப் படுகின்றனர். சிறிலங்காக் கடற்பரப்பில் கூட்டுப்பயிற்சிகள் ஒத்திகைகள் தொடர்கின்றன. வெளிநாட்டுப் பயிற்சியாளர்கள் பலாலியிலும், வேறு படைத்தளங் களிலும் பயிற்சிகளை வழங்கு கின்றனர். ஆட்சேர்ப்புக்கு பகீரத முயற்சி நடைபெறுகின்றது. இதற் கெல்லாம் தாம் ஒரு நாடென்ற ரீதியில் அதற்கு உரிமை உண்டென்று கூறப்படுகிறது.

அதேவேளை புலிகள் தம்மை இராணுவ ரீதியாகப் பலப்படுத்து கின்றார்கள் என்பது ஒரு குற்றச்சாட்டாக முன்வைக்கப்படு கிறது. ஆனால் சமாதான முயற்சி கள் சற்று முன்னேற்றம் காணப் படவில்லை என்பது மட்டுமல்ல, மேலும்மேலும் நெருக்கடிகளைச் சந்தித்துக்கொண்டே இருக் கின்றன.

விடுதலைப்புலிகளின் அரசியல் பணிப்போராளிகள் மீதான தாக்குதல்கள் தொடர்கின்றன. புலிகள் மீதான அவதூறுப் பிரச்சாரத்தை அரச ஊடகங் களும், இனவாத சக்திகளும் தொடர்ச்சியாக மேற்கொண்ட வண்ணமேயுள்ளன. இவையெல் லாம் தமிழ்மக்கள் மத்தியில் அர சாங்கம் மீதான நல்லெண் ணத்தை உருவாக்குபவையல்ல.

இந்நிலையில்தான் இப் பொழுது புலிகளுக்கு எதிராக அரசாங்கம் எடுத்துள்ள பிரச் சாரத்தின் வடிவமாகப் புலிகளின் விமானப்படை குறித்த செய்திகள் அமைகின்றன.

அதாவது இப்பொழுது சுனாமி அனர்த்தர்த்தால் தமிழ் மக்கள் சந்தித்த பெரும் துன்பத்திலிருந்து தமிழ் மக்களை மீட்டெடுக்க புலிகள் ஆற்றிய பணி உலகளாவிய ரீதியில் பெரும் பாராட்டைப் பெற்றிருக்கிறது.

அதேவேளை அரசாங்கத்தின் செயல்திறனின்மை,பாரபட்சம் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களைப் பார்வையிட ஐ.நா செயலாளர் உள்ளிட்ட உலகத்தலைவர்களுக்கு சிறிலங்கா ஆட்சியாளர் அனுமதி மறுத்தமை. ஆட்சியின் பங்காளிகளான ஜே.வி.பியினரின் ஐரோப்பிய நாடுகள் உதவி வழங்கும் நாடுகளுக்கு எதிரான கூச்சல்களால ஏற்பட்டிருக்கும் அவப்பெயர் என்பனவற்றை மூடிமறைக்கவே இன்றைய இந்தப் பிரச்சாரமாகும்.

புலிகளன் விமானப்படை குறித்து இன்று அவர்கள் மேற்கொள்ளும் பிரச்சாரம் சரியான தாயின் ஏழு ஆண்டுகளுக்கு முன்னரே இவர்கள் புலிகளின் விமானப்படைகுறித்துசெய்த பிரச்சாரங்கள் சிங்கள மக்களை ஏமாற்ற மேற் கொண்ட நடவடிக்கை என்பதாக வெளிப்படும் ஆனால் அப்பொழுது அவர்கள் புலிகளின் விமானம் குறித்து கொண்டிருந்த அச்சம் காரணமாக அதற்கெதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள் பலவற்றை எடுத்திருந்தனர் அவ்வாறாயின் இன்று அவர்கள் புலிகளிடட விமானம் இருப்பது குறித்து சர்வதேசத்திடம்முறையிடுவது உலக நாடுகளை ஏமாற்றவாம் அதேவேளை இதற்கு சில உலக அமைப்புகள் உதவுவது போலவும் இவர்கள் காட்டமுயல்கின்றனர்

ஆனால் " அவலை நினைத்து உரலை இடிப்பது" போல புலிகள் மீது அவதூறு விளை விக்கும் முயற்சியில் சர்வதேச தொண்டர் அமைப்புக்களை "பயங்கரவாதிகளுக்கு உதவுபவர்கள்" என்றும் உலக வங்கியை "வெள்ளைப் புலிகள்" என்றும் "நோர்வேயைப் புலிக ளுக்குச்சார்பானவர்கள் "என்றும் செய்யும் பிரச்சாரத்தின் விளைவை விரைவில் . இவர்கள் அனுபவிப் பார்கள்.

# 1300கிராம சேவகர் வெற்றிடங்கள்

(கொழும்பு)

வடகிழக்கு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களில் 90 பிரதேசசெயலாளர்கள், 1300 கிராம சேவையாளர் வெற்றிடங்கள் உள்ளதென உள்நாட்டு அமைச்சர் அமரசிறி தொடங்கொட கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

கிராம சேவையாளர்களைப் புதிதாக சேர்த்துக்கொள்வதற்கு மத்திய திறைசேரி அனுமதி வழங்கியுள்ளது. ஆகவே தற்பொழுது கிராம சேவையாளர்களின் மீள் பரிசீலணையின் அறிவித்தல் வரும்வரை காத்திருப்பதாகவும் அறிவித்தல் வந்தவுடன் புதிதாக இவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என அமைச்சர் தெரிவித்துள்ளார்..

# புதிய ஓய்வூதிய முறைமையை எதிர்த்து தொழிற்சங்க சம்மேளனம் ஆர்ப்பாட்டம்

அரசாங்கத்தினால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள புதிய ஓய்வூதிய முறைமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

அகில இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப் பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து ஆரம்பமாகி சம்போதி விகாரை வரை சென்றது.

பெருமளவிலான அரசாங்க ஊழியர்கள் கலந்துகொண்ட இந்த ஆர்ப் பாட்டத்தில் கடந்த அரசாங் கத்தின் ஆட்சிக்காலத்தின்போது சேமலாபநிதிச் சட்டத்தைத் திருத்து முகமாக புதிய ஓய்வூதிய முறை ஒன்று உருவாக்கப்பட்டபோதும் அதற்குச் சபாநாயகர் கையொப்பமிட வில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

புதிய ஓய்வூதிய முறையை நடை முறைப்படுத்துவதனால் ஊழியர்களது அதிகபட்ச ஓய்வூதியத்தில் நூற்றுக்கு 20 வீதமளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக அகில இலங்கை தொழிற்சங்கத தின் பிரதான செயலாளர் தெரிவித் துள்ளார்.

# சுனாமி அனர்த்தத்தின் பின்னர் சுற்றுலாத்துறையில் வீழ்ச்சியில்லை

-சிறிலங்கா சுற்றுலாசபை கூறுகின்றது

(கொழும்பு)

சிறிலங்காவின் சுற்றுலாத் துறையில் சுனாமி அனர்த்தத்தின் பின்னர் வீழ்ச்சி ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் மாத்திரம் சிறிலங்காவுக்கு 75 ஆயிரம் வெளிநாட்டவர்கள் வருகை தந்தனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது பாரிய வீழ்ச்சி யல்ல எனச் சிறிலங்கா சுற்றுலா சபை அறிவித்துள்ளது. அதேநேரம் 2004 ஆம் ஆண்டு இந்தத் தொகை 90 ஆயிரமாக இருந்ததாகவும் சுற்றுலா சபை தெரிவித்துள்ளது. (32)

# அ.சா.நி. பிரதிநிதிகள் வெளியேற்றம்; சிறிலங்கா சனாதிபதி கடும் விசனம்

(கொழும்பு)

சுனாமி பேரலைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக வருகை தந்திருந்த வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் நாட்டில் இருந்து வெளியேறி விட்டமையால் சனாதிபதி கடும் விசனம் அடைந்துள்ளார்.

சிறிலங்கா அரசு பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான காணி ஒதுக்கீடுகள் உள்ளிட்ட செயற்பாடுகளில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதால் இவர்கள் தமது நாடுகளுக்குத் திரும்பிச் சென்றுள்ளனர். இது சம்பந்தமாக அமைச்சர்கள் சனாதிபதிக்கு தெரிவிக்காதபடியால் சனாதிபதி செயலகம் கடும் சீற்றமடைந்துள்ளதென திவயின சிங்கள நாளிதழ் தெரிவித்துள்ளது.


**FORUT** *Campaign for Development & Solidarity*

## AN ORGANISATION PROMOTING ALCOHOL, DRUG , AND SMOKE FREE ENVIRONMENT

### VACANCY Announcement – Position : Documentation Officer

**FORUT**, an international NGO working in Sri Lanka since 1982, is inviting applications from qualified and experienced personnel to work with the poor and affected population to uplift their living status, by adopting participatory working methods. The candidates are expected to be team workers, who could work with the project teams to increase the efficiency and effectiveness.

| Minimum Requirements | Tasks |
|---|---|
| · GCE(A/L) Qualified /Graduate<br>· Excellent proven command of English and Tamil, preferably some knowledge of Sinhala.<br>· Excellent proven computer skills.<br>· 2 years experience in writing documents and reports<br>· Ability to conduct research and report.<br>· Ability to gather and transmit information and information management<br>Age 25-35 years | · Maintain databank on complete programme.<br>· Net working , record keeping, & data base management<br>· Produce monthly / Quarterly/Half-yearly / Annual reports<br>· Visit field and document information as case story or report<br>· Publish newsletter routinely to carry project information<br>· Document workshops, seminars and reviews<br>Write minutes / reports |

**Females are encouraged to apply**. Duration of contract will be one year with possible extensions depending on availability of funds and staff performance. **Only short listed candidates will be called for interview.**

Completed applications should be forwarded to reach Programme Manager, FORUT Vanni, 155th Mile Post, A-9 Road, Kilinochchi **on or before 31 March 2005.**

**E-Mail :-** arne@forut.lk

**Postal address :-** **Program Manager**
**FORUT,**
**Vanni Regional Secretariat**
**155th Mile Post,**
**A-9 Road,**
**Kilinochchi.**

(சி.11602)



04ஆம் ஆண்டில் நீங்காத நினைவில்



தாயின் மடியில் 1983-09.15
தாயக மண்ணில் 2001-03.20

சம்பவம்:- ஓயாத அலை கள் 03 நடவடிக்கையின் போது விழுப்புண் அடைந்து....

ஆண்டுகள் நாலு ஓடி
மறைந்ததையா-டெனி
தினமும் நீ எங்கள்
மனங்களில்-ஐயா
ஏழேழு ஜென்மம் நாம்
எடுத்தாலும்
எம் மனம் என்றும்
உன் நினைவில்- ஐயா

லெப்.டெனி
மேரி யோசப் தங்கதாஸ்
இல:-330 ஜெயந்திநகர்-கிளி

தகவல்:- V.M.யோசப் குடும்பத்தினர்

(5904)



85 ஆம் நாள் நினைவில்



| தாயின் மடியில் | கடலின் அடியில் |
|---|---|
| 07 - 07 - 2003 | 26 - 12 - 2004 |

மாசிலாமணி றமணன்
மாமுனை வடக்கு
செம்பியன்பற்று

மழலை மொழியால் – எம்
மனங்களிலே நிறைந்திருந்தாய்
தத்தி நடை பயின்று – எமை
தாவி அணைத்து வந்தாய்
பிஞ்சு வயதென்றும் பாராது
காலனவன்
அலையதனில் ஏறிவந்து – உன்னை
அள்ளிக்கொண்டு போனானே!

உன்பிரிவால் துயருறும்,
அம்மா மா.ஜெயலட்சுமி
அண்ணா மா.பிரசாந்தன்
அக்காமார்.

(சி-11567)

# ஷியா முஸ்லிம் கூட்டணி, குர்திஸ் கூட்டணி

# ஈராக்கில் ஆட்சி அமைப்பதில் உடன்பாடு

## - ஜலால் தலபானி சனாதிபதியாகிறார்

(பாக்தாத்)

**ஈராக் புதிய சனாதிபதியாக ஜலால் தலபானி தேர்ந்தெடுக் கப்படவுள்ளார். இது தொடர்பாக, ஷியாமுஸ்லிம் கூட்டணி, குர்திஸ் கூட்டணி இடையே உடன்பாடு ஏற்படும் நிலை தோன் றியுள்ளது.**

ஈராக்கில் அதிபர் சதாம் குசைனின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பிறகு அங்கு முதன்முறையாகக் கடந்த சனவரி மாதம் 30 ஆம்திகதி பாராளுமன்ற தேர்தல் நடந்து அதில் எந்தக் கூட்டணிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

மொத்தமாகவுள்ள 275 இடங் களில் ஷியாமுஸ்லிம் கூட்டணி 140 இடங்களையும், குர்திஸ் கூட்டணி 80 இடங்களையும், தற்காலிக பிரதமர் அயத் அல்லாவியின் கட்சி 30 இடங் களையும் கைப்பற்றின. ஈராக்கில் சனாதிபதி பிரதமரைத் தேர்ந்து எடுக்க மூன்றில் இரண்டு பங்கு உறுப் பினர்கள் ஆதரவு வேண்டும்.

இழுபறி நிலை ஏற்பட்டதால் கடந்த இரண்டு மாதமாக ஆட்சி அமைக்க முடியவில்லை. புதிய அரசு அமைப்பது தொடர்பாக ஷியா முஸ்லிம்கூட்டணித்தலைவர்கள் மற் றும் குர்திஸ் கூட்டணித் தலைவர்கள் இடையே பேச்சுவார்த்தை நடந்தது. பேச்சுவார்த்தையில் குர்திஸ் கூட்டணியைச் சேர்ந்த தலபானியை சனாதிபதியாக்க உடன்பாடு ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

பாராளுமன்றம் அடுத்து வருகிற 25 அல்லது 26ஆம்திகதி கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது. அதற்கு முன் உடன்பாடு இறுதியாக்கப்பட்டு விடும் என்று குர்திஸ் அணித்தலைவர் ஜலால் தலபானி கூறினார். அடுத்த பாராளு மன்றக் கூட்டத்திற்கு முன்பு பிரதமர், பாராளுமன்ற சபாநாயகர் ஆகி யோரைத் தேர்ந்து எடுப்பதில் உடன்பாடு காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பிரதமர் பதவி ஷியா முஸ்லிம் கூட்டணிக்கு வழங்கப்படும் என்று கூறப்படுகிறது.



லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் கார்க் குண்டு வெடிப்பில் சேதமடைந்த கட்டடமும், காவல்நிற்கும் படையினரும்.


# செயற்கை ஏரியால் ஆபத்து சமாளிக்க இந்தியா, சீனா பேச்சு

(பீஜிங்)

திபெத்தில் பரேச்சு நதி அருகே செய்கை ஏரியால் ஏற்பட்டுள்ள அச்சுறுத் தலைச்சமாளிப்பது தொடர்பாக இந்தியா, சீனா இடையே உடன்பாடு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

பீஜிங்கில் இரண்டு நாட்கள் நடந்த பேச்சில் இந்தியா தரப்பில் மத்திய நீர்வளத்துறை செயலர் வி.கே.துக்கலும் சீன தரப்பில் துணைப் பிரதமர் ஜாய்ஹுயாயும் கலந்து கொண்டனர்.

பேச்சுவார்த்தை பயனுள்ளதாக இருந்தது. உடன்பாடு தொடர்பான விபரங்கள் அடுத்த மாதம் சீனப் பிரதமர் வென்ஜியாபோ இந்தியா வரும் போது வெளியிடப்படும் என்று சீன அதிகாரிகள் கூறினர். சடலெஜ் ஆற்றில் வெள்ளம் வரும்போது, நீரின் அளவு குறித்த தகவல்களை இந்தியாவுக்கு சீனா அளிப்பது தொடர்பாகவும் ஓர் ஒப்பந்தம் பீஜிங் பேச்சின்போது இறுதி செய்யப்பட்டுள்ளது. மக்களுக்கு வெள்ளம் குறித்து உரிய நேரத்தில் எச்சரிக்கை தர இந்தத் தகவல்கள் மிகவும் உதவியாகவிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஈரானைச் சேர்ந்தவர் முகமது பிஜேக்கு குழந்தைகள் உட்பட 21பேரைக் கடத்திக் கொலை செய்த குற்றத்திற்காக பாக்தாஷ்த் நகரில் பொதுமக்கள் முன்னிலையில் 100 கசையடி கொடுக்கப்படுகிறது. அவர் பின்னர் தூக்கிலிடப்பட்டார்.

# ஒரு லட்சம் பாகிஸ்தானியருக்கு மலேசியா வேலைவாய்ப்பு வழங்கும்

பாகிஸ்தான் பிரஜைகள் ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்போவதாக மலேசியா அறி வித்துள்ளது. முன்பு மலேசி யாவில் ஆயிரக்கணக்கான வெளிநாட்டுப் பிரஜைகள் சட்டவிரோத மாகத் தங்கி வேலை பார்த்து வந்தனர். இவர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்றும் இதற்கு பெப்ரவரி 28 ஆம் திகதி கெடு என்றும் மலேசிய அரசு அறிவித்திருந்தது.

இதை அடுத்துப் பலர் வெளி யேறிவிட்டனர். இதில் 17 ஆயிரம் இந்தியத் தொழிலாளர்கள் அடங் குவர். இதை அடுத்து கட்டுமானத் துறை, மலைத்தோட்டம். விடுதிகள் முடிதிருத்தும் நிலையம் போன்ற வற்றில் கடும் ஆள் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து கடந்த மாதம் மலேசிய பிரதமர் அப்துல்லா பத்வாய் பாகிஸ்தான் சென்றிருந்தார். மலேசியாவில் உள்ள ஆள் பற்றாக்குறையைத் தீர்க்க பாகிஸ்தானில் உள்ளவர் களுக்கு வேலை வாய்ப்பு அளிப்ப தாக அவர் அறிவித்தார்.

மலேசியாவில் தற்போது பொருட்கள் உற்பத்தித் துறையில் இரண்டு லட்சம் பேரும், கட்டு மானத்துறையில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேரும், தோட்டப் பயிர் துறை யில் 50 ஆயிரம் பேரும், சேவைத் துறையில் 20 ஆயிரம் பேரும் தேவைப்படுகின்றனர்.

மலேசியாவில் தொழிலாளர்கள் பற்றாக்குறையால் சில விடுதிகள் முடிதிருத்தும் நிலையங்களை மூடி விடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியா, சீனா, வியட்னாம் ,மியான்மர் ஆகிய நாடுகளைச் சேர்ந் தவர்களுக்கும் வேலைவாய்ப் புக் கிடைக்குமா என உள்துறை அமைச் சர் காலித்திடம் கேட்ட போது, இப் போதைக்கு இல்லை எனப் பதில ளித்தார்.

# குஜராத் முதல்வருக்கு அமெ.விசா வழங்க மறுப்பு

# இந்திய மத்திய அரசு கடும் கண்டனம்

(வோஷிங்டன்)

குஜராத் முதல்வர் நரேந்திரமோடிக்கு ராஜீயவிசா வழங்க அமெரிக்கா மறுத்துள்ளது மேலும் அவருடைய சுற்றுலா -வியாபார விசாவையும் அந்நாடு திரும்பப் பெற்றுள்ளது.

மதச் சுதந்திரத்துக்கு எதிராகச் செயற்பட்டதாகக் கூறி மோடியின் விசாவைத் திரும்பப் பெற்றுள்ளது அமெரிக்கா.

அமெரிக்காவின் /புளோரிடா மாகாணத்தின் .'.போர்ட் லாதரேட்டில் நடைபெறும் ஆசிய -அமெரிக்க விடுதி உரிமையாளர்கள் சங்கக் கூட்டத்தில் பேசுவதற்காகவும், இந்தியாவில் முதலீடு செய்ய அந்நாட்டு வர்த்தகர்களைக் கோருவதற்கும் ஐந்துநாள் பயணமாக அமெரிக்கா செல்லவிருந்தார் மோடி.

இதற்காக ராஜீய அந்தஸ்து விசாவிற்கு விண்ணப் பித்திருந்தார். மத்திய அரசின் மூலமாக இந்த விசாவுக் கான விண்ணப்பம் கடந்த பெப்ரவரி 28ஆம்திகதி அனுப் பப்பட்டது.

இதை நிராகரிப்பதாகவும், ஏற்கெனவே அளிக்கப்பட்ட சுற்றுலா- வியாபார விசாவைத் திரும்பப் பெறுவதாகவும் அமெரிக்கத் தூதரகம் நேற்றுமுன்தினம் காலை அறி வித்தது.

மோடிக்கு விசா மறுக்கப்பட்டதற்கு மத்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அமெரிக்காவுடன் பேசப்படும் என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர்சிங் தெரிவித்தார்.

பிரதமரிடமும் மற்ற அமைச்சரவை சகாக்களுடனும் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். அவர்.

# எட்டு பாக். படையினர் பலி

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் பலூசிஸ்தான் மாகாணத்தில் பழங்குடியினருடன் நடந்த சண்டையில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த எட்டுப் பேர் பலியாகியுள்ளனர்.

பலூசிஸ்தான் மாகாணத்தில் தேராபக்டி என்ற இடத்தில் துணை இராணு வத்தினர் 40 பேரைப் பழங்குடித் தீவிரவாதிகள் கடந்த வியாழக்கிழமை சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்தினர். இந்தச் செய்தியை கேள்விப்பட்டதும் சம்பவ இடத்திற்கு இராணுவ வீரர்கள் அதிக அளவில் அனுப்பட்டனர். தேராபக்டி புறநகர் பகுதியான சங்செலா என்ற இடத்தை இராணுவ வாகனங்கள் சென்றடைந்தபோது மலைப்பகுதியில் ஒளித்திருந்த தீவிரவாதிகள் இராணுவவீரர்கள் மீது தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் எட்டு வீரர்கள் பலியானார்கள்.

# புஷ்ஷின் அழைப்பை ஏற்ற மன்மோகன்சிங் அமெ.செல்கிறார்


(புதுடில்லி)



அமெரிக்க அதிபர் புஷ்ஷின் அழைப்பின் பேரில் இந்தியப் பிர தமர் மன்மோகன்சிங் வரும் ஜூலை மாதம் அமெரிக்கா செல்லவுள்ளார். மன்மோகன் சிங்கை டில்லியில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலீசா ரைஸ் கடந்த புதன் கிழமை சந்தித்துப் பேசியபோது இந்தஅழைப்பு விடுக் கப்பட்டது.

"இந்தியாவுடனான உறவுக்கு அமெரிக்க அதிபர் புஷ் மிகுந்த முக்கியத்துவம் தருகிறார்'' என மன்மோகன்சிங்கிடம் தெரிவிக்கப்பட்டதாக அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் நிருபர்களிடம் தெரிவித்தனர். மன்மோகன்சிங் பயணம் மேற்கொள்ளவுள்ள திகதி குறித்து இரு தரப்பு அதிகாரிகள் மூலம் பேசி முடிவு செய்யப்படும். இதற்கான நிகழ்ச்சி நிரலும் தயாரிக் கப்படும். மேலும் இவ்வாண்டு இறுதியிலோ அடுத்த ஆண்டு தொடக்கத்திலோ இந்தியாவுக்கு புஷ் வரவுள்ளதாகவும் அதி காரிகள் தெரிவித்தனர். மன் மோகன்சிங்-ரைஸ் சந்திப்பு 25 நிமிடங்கள் நீடித்தது. "இந்தியா வுடனான நல்லுறவை உறுதிப் படுத்தும் விதமாக வெளியுறவு அமைச்சராக நான் பதவியேற்றவுடனேயே இந்தியாவுக்குச் செல்ல வேண்டும் என புஷ் முடிவெடுத்தார்.'' என ரைஸ் கூறினார். எரிசக்தித் துறையில் இரு தரப்பு ஒத்துழைப்புக் குறித்த அவசியத்தை அவரிடம் பிரதமர் மன்மோகன்சிங் எடுத்து ரைத்தார். பிரதமர் மன்மோகன் சிங்கின் பயணத்திற்கு முன்பாக அடுத்த மாதத்தில் வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் அமெரிக்காவிற்குச் செல்லவுள்ளார்..



அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சின் செயலர் கொண்டலீசாரைஸ் தென்கொரியாவிற்கான விஜயத்தின்போது நேற்று தென்கொரியாவின் இராணுவ விமான நிலையம் ஒன்றில் அவரது விமானத்திலிருந்து இறங்குகிறார்.

## மாட்டினின் சதத்தால் வலுவான நிலையில் அவுஸ்



நியூசிலாந்து-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் வெலிங்டனில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடும் அவுஸ்திரேலியா மாட்டினின் சதத்தின் உதவியால் முதல் நாளில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 337 ஓட்டங்களைப் பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அவுஸ்திரேலியாவை துடுப்பாடப் பணித்தது. முதல் நாள் ஆட்டம் மழையால் முற்றாகக் கைவிடப்பட்டது. இரண்டாம் நாளான நேற்று துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 337 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் லாங்கர் 46, ஹெய்டன் 61, கட்ரிச் 35 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.


ஆட்டமிழக்காது மாட்டின் 106 ஓட்டங்களையும், கில்கிறிஸ்ட் 45 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

பந்து வீச்சில் பிறாங்லீன், விட்டோரி தலா இரண்டு விக்கெட்டுக்களையும், அஸ்ரல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

## ராவிட் சதம்; தினேஷ் கார்த்திக் அபாரம்

## பாகிஸ்தானின் வெற்றி இலக்கு 422





இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் கொல்கத்தாவில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வெற்றிபெற 422 ஓட்ட இலக்கை நிர்ணயித்துள்ளது கங்குலி தலைமையிலான இந்திய அணி.

போட்டியின் நான்காம் நாளான நேற்றைய ஆட்ட நேர முடிவில் வெற்றி இலக்கு நோக்கி ஆடும் பாகிஸ்தான் ஒரு விக்கெட்டை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக இரண்டாவது இனிங்சில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களுடன் நான்காம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இந்தியா ராவிட்டின் சதம், கார்த்திக்கின் அபார ஆட்டத்தின் துணையுடன் முதல் இனிங்ஸ் ஓட்ட எண்ணிகையான 407 ஓட்டத்தை ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இதனால் முதல் இனிங்சில் 14 ஓட்டங்களால் முன்னிலையில் இருந்த இந்தியா பாகிஸ்தானுக்கு 422 என்ற வெற்றி இலக்கை நிர்ணயித்தது.

ராவிட் 135 ஓட்டங்களையும், கார்த்திக் 93 ஓட்டங்களையும் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தனர். ராவிட் டெஸ்ட் போட்டியில் இருபதாவது சதத்தைப்பூர்த்தி செய்தார். கார்த்திக் தனது கன்னிச் சதத்தை ஏழு ஓட்டங்களால் தவறவிட்டார்.

பந்து வீச்சில் கனேரியா, ரசாக், சமி தலா மூன்று விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

நான்காம் நாள் ஆட்டம் நிறைவடைய 20 ஓவர்கள் இருக்கும் நிலையில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் ஒரு நாள் ஆட்டத்தைப் போன்று வேகமாக ஓட்டத்தைக் குவித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அப்ரிடி ஆக்ரோசமாக விளையாடி அரைச்சதம் அடித்தார். மறுமுனையில் தபிக் உமர் நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார்.

அப்ரிடி 59 பந்துகளில் 59 ஓட்டங்களைப் பெற்று கும்ளேயின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

போட்டியின் இறுதி நாளான இன்று ஒன்பது விக்கெட்டுக்கள் கைவசம் உள்ள பாகிஸ்தான் வெற்றிபெற 327 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளது பொறுத்திருந்து பார்ப்போம் ரசிகர்களே.

## தவறான தீர்ப்பு வழங்கினார் ஸ்டீவ் பக்னர் மீது சர்ச்சை



சச்சினுக்கு தவறான அவுட் கொடுத்ததில் நடுவர் ஸ்டீவ்பக்னர் மீது சர்ச்சை எழும்பியது.

இந்தியா-பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டி கொல்கத்தாவில் நடந்து வருகிறது. இந்தப் போட்டிக்கான இரண்டாவது இனிங்சில் இந்தியா மூன்று விக்கெட் இழப்புக்கு 133 ஓட்டம் பெற்றது. இந்தியாவின் நம்பிக்கை நாயகன் சச்சின் டெண்டுல்கர் 52 ஓட்டத்துடன் ஆட்டம் இழந்தார். ரசாக் வீசிய பந்து ஓப்ஸ்டம்புக்கு வெளியே சென்றது. இந்தப் பந்தை ஆட முற்பட்ட டெண்டுல்கர் பின்னர் தனது மட்டையை உள் நோக்கி இழுத்து விட்டார்.

இருந்த போதும் ரசாக் நடுவர் ஸ்டீவ் பக்னரிடம் அவுட் கேட்டார். நிலை தடுமாறிய நடுவர் டெண்டுல்கருக்கு அவுட் கொடுத்தார். நடுவரின் இந்தத் தீர்ப்பால் டெண்டுல்கர் பெரிதும் ஏமாற்றம் அடைந்தார். பின்னர் நடுவரின் தீர்ப்பை மதித்து அவர் வெளியேறினார். ஆனால் தொலைக்காட்சி பதிவை திருப்பி பார்த்த போது டெண்டுல்கர் ஆட்டமிழக்கவில்லை என்பது தெளிவாக தெரிந்தது. இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் நடுவர் பக்னர் ஏற்கனவே சில முறை இது போன்ற தவறான தீர்ப்புகள் கொடுத் துள்ளார். அப்போது முதல் இந்தியாவுக்கு எதிரான போட்டி என்றால் பக்னர் மீது ரசிகர்கள் அதிருப்தியுடன் காணப்பட்டனர். இதை நிரூபிக்கும் வகையில் நேற்று முன்தினம் போட்டியிலும் பக்னர் தடுமாறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆரவாரமின்றி நிறைவுபெற்ற கல்லூரிகளுக்கு இடையிலான போர்

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி-சென்ஜோன்ஸ் கல்லூரிக்கு இடையே இடம் பெற்ற துடுப்பாட்டப் போட்டி எந்த வகையான குழப்பங்களும் இன்றி முடிவடைந்துள்ளது.

இம்முறை மைதானத்தில் அமைதி ஒழுங்கை கடைப்பிடிப்பதில் தமிழீழ விளையாட்டுத்துறையும் மற்றும் மாணவர் அமைப்பும் இணைந்து பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர்.

விக்கெட் இழப்புக்கள் மற்றும் ஓட்டங்கள் பெறும் சந்தர்ப்பங்களில் மைதானத்தில் சென்று ஆர்ப்பாட்டம் செய்யும் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு யாருக்கும் இடமளிக்கப்படவில்லை.

மைதானத்தில் ஒழுங்குகளை சிறப்புச்செயலணியினர் கடுமையாக கடைப்பிடித்தமையே அமைதியான முறையில் போட்டிகள் முடிவடையக் கூடியதாக இருந்ததென பொது மக்களும், ரசிகர்களும் தெரிவிக்கின்றனர். (41)

## கிரிக்கெட் போட்டியை காணச்சென்ற பாடசாலை மாணவி படுகாயம்

யாழ். மத்திய கல்லூரி - சென்ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியைப் பார்வையிடச் சென்ற சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி சைக்கிள் விபத்தில் கால் முறிந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அரியாலை சுப்பிரமணியம் வீதியைச் சேர்ந்த பால சுப்பிரமணியம் பௌத்திரா 15 வயது என்ற மாணவியே கால் முறிந்து யாழ். போதனா வைத்தியசாலை 23ஆம் விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சமாந்தரமாக சென்ற சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று கொழுவியதைத் தொடர்ந்து இவ்விபத்து இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (41)

## கோட்ட மட்ட உடற்பயிற்சிப் போட்டி

கண்டாவளைக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்ட உடற்பயிற்சிப் போட்டி இறுதி நிகழ்வுகள் நேற்று முன்தினம் கிளி/முருகானந்தா முரசு மோட்டை மகாவித்தியாலயத்தில் கண்டாவளைக் கோட்ட கல்விப் பணிப்பாளர் இராசகுலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.


## கால்பந்தாட்டப் போட்டியின் நாளைய போட்டிகள் விபரம்

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்ட பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-

*. வலிகாமம் லீக்கைச் சேர்ந்த இளந்தென்றல் வி. கழகம் எதிர் யாழ் லீக்கைச் சேர்ந்த நாவாந்துறை கலைவாணி வி.க.

* வலிகாமம் லீக்கைச் சேர்ந்த இளந்தென்றல் கல்வளை விநாயகர் வி. கழகம் எதிர் கலைமகள் ...ழகம். (41)

## தேசிய அணியில் இணைவதற்கான முதற்கட்ட பயிற்சியில் கிளி.மாணவிகள்



ஆ.தனஞ்சியா, ஆ. சுபர்ணா

இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கத்தினால் மாத்தளையில் கடந்த மாதம் நடாத்தப் பெற்ற வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணியும் பங்குபற்றியது.

மேற்படி அணியைச் சேர்ந்த செல்வி ஆ.தனஞ்சியா, ஆ. சுபர்ணா ஆகிய இருவருக்கும் தேசிய அணிக்கு தெரிவு செய்வதற்கான முதற்கட்ட பயிற்சி கொழும்பிலுள்ள தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் தற்போது நடைபெற்று வருகின்றது.

கடந்த பெப்ரவரிமாதம் 26, 27ஆம் திகதிகளில் மேற்படி வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி மாத்தளையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## கால்பந்துத் தொடரின் இன்றைய போட்டிகள்

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைப்பந்தாட்ட லீக் நடத்தி வரும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விபரங்கள் வருமாறு

வலிகாமம் லீக்கைச்சேர்ந்த யங்கென்றீசியன்ஸ் வி.கழகம் எதிர் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த கலைமதி வி.கழகம். யாழ். லீக்கைச்சேர்ந்த எவரெஸ்ற் வி.கழகம் எதிர் வலிகாமம் லீக்கைச்சேர்ந்த காளியம்பாள் வி.கழகம். (41)

## புதிய ஒப்பந்தம் மேற்கொண்டால் மேற்கிந்திய அணியில் பிறைன் லாறா?



புதிதாக போட்டிகளுக்கு ஒப்பந்தம் செய்தால் தென்னாபிரிக்காவுடனான போட்டிகளில் மேற்கிந்திய தீவுகள் அணியில் பிறைன் லாறா இணைத்துக் கொள்ளப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் லாறாவிடம் புதிய ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திடுமாறு கோரி 24 மணித்தியாலம் காலக்கெடு விதித்து இதற்கிடையில் டிஜிசல் நிறுவனத்துடனும் கிரிக்கெட் சபையுடனும் லாறா எந்த முரண்பாடும் கொண்டிருந்ததில்லையென அவரின் சட்டவாளர்கள் தெரிவிக்கின்றனர்.


லாறா புதிய அணியில் இணைக்கப்பட்டாலும் ஏனைய வீரர்களான கிறிஸ் கைல்ஜ், சர்வான், வெயின், பிராவோ, பிடல் எட்வட்ஸ், வெயின் ஸ்மித், ரவி ராம் போல் தகுதியற்றவர்களாக கணிப்பிடப்பட்டுள்ளனர்.

## ஒரு நாள் போட்டியில் ஆட சொஹைப் அக்தர் விருப்பம்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான சொஹைப் அக்தர் தசைப்பிடிப்பு காரணமாக இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் இடம் பெறவில்லை.இந்த நிலையில் இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் போட்டித் தொடரில் ஆட ஆர்வமாக இருப்பதாக சொஹைப்அக்தர் கூறியுள்ளார். உடல் தகுதியை பொறுத்தே ஆடுவது முடிவாகும். குறைந்தபட்சம் மூன்று ஒரு நாள் போட்டியில் ஆட முடிந்தாலும் மகிழ்ச்சிதான் என்று அவர் கூறியுள்ளார்.

## ஷரபோவா அதிர்ச்சித் தோல்வி




கலிபோர்னியாவில் பசிபிக் ஓபன் டென்னிஸ் போட்டி நடைபெற்று வருகிறது. இதன் அரை இறுதிப் போட்டியில் உலகின் முதல் நிலை வீராங்கனையான மரியா ஷரபோவா, அமெரிக்க வீராங்கனை டேவன்போர்ட்டுன் மோதினார். இதில் ஷரபோவா 6-0, 6-0 என்ற நேர் செட்டில் அதிர்ச்சிகரமாகத் தோல்வியடைந்தார்.

அவுஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் அரையிறுதிப் போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்சிடம் தோல்வியுற்ற ஷரபோவாவிற்கு மேற்படி தோல்வி பெரும் பின்னடைவாகும்.

விளையாட்டு

## சிந்தனைக்கு



சுதந்திரம் தான் மனித வாழ்விற்கு அர்த்தத்தைக் கொடுக்கின்றது; முழுமையைக் கொடுக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 20-03-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com

## கண்ணியமற்றவர்கள்

சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் அரசியல் வரலாற்றில் என்றுமில்லாதவாறு கண்ணியமற்ற ஆட்சியாளர்கள் தற்பொழுது பதவியிலுள்ளனர். இவ்வாட்சியாளர்களிடம் நேர்மையும் கிடையாது. சுயமரியாதையும் கிடையாது. இவர்களுக்குத் தேவை ஆட்சியதிகாரமும், வெளிநாட்டவரின் உதவிகளும் மட்டும்தான்.

ஆட்சியாளர்களில்– முதலில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. இவர் கண்ணியமானவராக, உண்மை பேசுபவராகவிருந்தால் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிதியுதவி ஐந்து சதம்கூட கைக்குக்கிட்டவில்லை என அவர் பேசியிருக்க முடியாது. ஏனெனில், சுமார் எழுபதாயிரம்கோடிரூபா ஏற்கனவே நிதி மூலமான உதவியாக சிறிலங்கா அரசு பெற்றுக்கொண்டுள்ளது. ஆகையினால் சனாதிபதி சந்திரிகா இவ்விடயத்தில் மிகுந்த கண்ணியக்குறைவாக நடந்துகொண்டுள்ளார் என்பதை எவருமே நிராகரித்துவிட முடியாது. இதே சமயம் சனாதிபதி சந்திரிகாவின் இப் பேச்சானது அவர் தனது அரசியல் அதிகாரத்தைத்தக்க வைப்பதற்காக எத்தகைய நடவடிக்கைகளையும் மேற் கொள்ளவும், எவரையும் உதாசீனம் செய்யவும் தயங்கமாட்டார் என்பதற்குச் சிறப்பானதொரு உதாரணமாகும்.

இதேவேளை ஆட்சியில் மற்றொரு பங்குதாரர்களான ஜே.வி.பி.யினர் சனாதிபதி சந்திரிகாவைவிட மிக மோசமான செயற்பாடு கொண்டவர்களாக உள்ளனர்.மக்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட வேளையில் கூட ஜே.வி.பியினர் தமது அரசியல் அபிலாசைகளையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டவர்கள். அத்தோடு நிவாரணப் பொருட்களை வெளிநாடுகள் வாரி வழங்கிய போது கையேந்திப்பெற்றுவிட்டு தற்பொழுது உதவி வழங்கும் நாடுகளுக்கு எதிராகக் கூச்சல்போடத் தொடங்கியுள்ளனர். அதாவது அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்நாட்டு விடயங்களில் தலையிடுவதாகவும், இவை இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கும் அச்சுறுத்தலாகி வருவதாகவும் ஜே.வி.பி உதவி வழங்கியோர் மீது குற்றஞ்சாட்டுகிறது.

இவ்வாறு ஜே.வி.பி அரசசார்பற்ற நிறுவனங்களைச் சாடுவதற்கு இரண்டு காரணங்களை வெளிப்படுத்தி வருகின்றது . அரசபார்பற்ற நிறுவனங்கள் தமது நிவாரணப்பணிகள்/ நிவாரணப் பொருட்கள், விநியோகம் என்பனவற்றின் பெரும்பகுதியை தமிழர்பிரதேசங்களில் மேற்கொள்கின்றன என்பது. உண்மை நிலைமை ,அவ்வாறு இல்லை என்பது வேறு விடயம்.ஆயினும் சிறு தொகுதிதானும் தமிழ் மக்களுக்குச் சென்றடைதல் கூடாது என்பதே ஜே.வி.பியின் நிலைப்பாடாகும். இரண்டாவது, நாட்டிற்கு நிதியுதவி எனக் கூறிவிட்டு அரசசார்பற்ற நிறுவனங்களிடம் நிதி உதவிகளை சர்வதேச நாடுகள் வழங்கி வருகின்றமையாகும். அதாவது நிதியுதவிகள் தங்கள் அரசாங்கத்தின் மேற்பார்வையில் செலவிடப்பாடாததே காரண மாகும். அவ்வாறு இல்லாது விடில் ஜே.வி.பி யினர் சுனாமி அனர்த் தத்தின் பின்னர் சர்வதேச நாடுகள் பெருமளவு நிவாரணப் பொருட்கள் வழங்கியபோது அவற்றை வேண்டாமெனக் கூறியிருத் தல் வேண்டும்.அல்லது பொருட்கள் விநியோகத்தில் தாங்கள் சம்பந்தப்படாது இருந்திருத்தல் வேண்டும்.

ஆனால் ஜே.வி.பி. அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. வழியில் தேங்காயை எடுத்து தெருப்பிள்ளையாருக்கு உடைத்தது போன்று வெளிநாட்டவர் அனுப்பிய நிவாரணங்களைத் தென்னிலங்கையில் தனது விருப்பு வெறுப்பிற்கு ஏற்பவே பங்கிடவிரும்பியது. அதுமட்டுமல்ல அரசின் நிவாரண நடவடிக்கையைக் கூட தனது பெயரிலேயே வழங்க முற்பட்டது.

இருப்பினும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஜே.வி.பி.யின் இத்தகைய நிலைப்பாட்டிற்கு அனுகூலமானவையாக இல்லை. சர்வதேச சமூகம் நிவாரணப் பொருட்கள் வடக்கு கிழக்குப் பகுதிக்குச் சம அளவில் பங்கீடு செய்யப்படவில்லை என்பதைக் கண்டு கொண்டுள்ளன. ஆகையால், சிறிலங்கா அரசிடம் புனர்வாழ்வுப்பணிக்கான பொதுத்திட்டம் ஒன்று இல்லாது நிதியுதவிகளையளிக்க அவை தயக்கம் காட்டுகின்றன

இத்தகையதொரு நிலையில் தான், அரசசார்பற்ற நிறுவனங்கள் மீதும், உதவி வழங்கும் நிதிஅமைப்புக்களின் மீதும் தமது சீற்றத்தை ஜே.வி.பி. வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளது. உதவிவழங்கு பவர்களைக் கீழ்த் தரமாகப் பேசவும், விமர்சிக்கவும் முன்வந் துள்ளது.இத்தனைக்கும் ஜே.வி.பிக்கோ அன்றி வேறு எவருக்குமோ சர்வதேச உதவிகள் தேவையற்று இருப்பின் அவர்களின் கொள்கைக்கு மாறானதாக இருப்பின், அது வேறுவிடயம்.

அதவாது நிவாரணமும் சரி, நிதியுதவியும் சரி, தேவையற்றவை அல்ல என்பதல்ல ஜே.வி.பி.யின் நிலைப்பாடு. ஆனால் வழங்கப்படும் நிதியுதவிகள் தமிழ் மக்களுக்கோ அன்றித் தமிழர் தரப்பிடமோ சென்று சேருதல் கூடாது என்பது மட்டுமே ஜே.வி.பி.யின் நிலைப்பாடாகும். அவ்வாறு இல்லாது விடின் தற்பொழுது அமைச்சரவையில் பங்கேற்கும் ஜே.வி.பி. அமைச்சர்கள் வெளிநாடுகளின் நிதியுதவிகளைக் கோரி நிற்பதும், உடன் பாடுகளில் கையொப்பம் இடுவதையும் எந்த வகையில் உள்ளடக்கிவிட முடியும்.?

# மட்டக்களப்பில் படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரிப்பு

## –ஜெயானந்த மூர்த்தி பா.உ சனாதிபதிக்கு கடிதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக படையினரின் சோதனைக், கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயனந்தமூர்த்தி சனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

இது தொடர்பாக அவர் சனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை என்று கூறப்பட்டாலும் அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி படையினர் சோதனைக் கெடுபிடியை அதிகரித்துள்ளதாகவும் இதனால் மக்கள் பீதியடைந்துள்ளதாகவும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் படைமுகாம்கள் பலப்படுத்துதல் வீதிகளில் புதிய!!! இராணுவ நிலைகளை அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் போர் நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல் என்றும் அக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# எதிர்காலம் குறித்த தீர்மானமொன்றை எடுக்க வேண்டிய நிலையில் மக்களுள்ளனர்

## –எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

எதிர்காலம் குறித்து தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டிய சூழ்நிலை நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடைய அரசாங்கம் மக்களுடன் இணைந்து செயற்பட வேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டார். எனினும் தற்போதைய அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்து மூன்று மாதத்திற்குள் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகக் கூறியபோதிலும் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளைக்கூட அவர்கள் மறந்துவிட்டார்களென்றும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். புத்தளம் மாவட்டத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல்அதிகார சபை மறுசீரமைப்புக் கூட்டத்தின்போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; ஒரு வருடமாகியும் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. அவற்றைத்தீர்ப்பதாக மக்கள் விடுதலை முன்னணியும் வாக்குறுதியளித்தார்கள். அந்த உறுதியை மக்கள் நம்பினார்கள்.. இருந்தாலும் இன்றும் வாழ்க்கைச் செலவுப் பிரச்சினைகளோ, தொழில் பிரச்சினைகளோ தீர்க்கப்படவில்லை. பிரச்சினைகளை மறந்து போய்விட்டார்கள். அப்படியானால், மூன்று மாதங்களில பிரச்சினைகளைத் தீபபதாக தேர்தல் வாக்குறுதியளித்த அரசாங்கம் ஒரு வருடமாகியும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மறந்து போவார்களேயானால் எமக்கு அந்த அரசாங்கம் மீது எதிர்பார்ப்பொன்றை வைக்க முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைவிட இந்தக் கூட்டமைப்பு அரசாங்கம் நல்லது. சந்திரிகாவும் பொதுசன ஐக்கிய முன்னணியும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என்பதை உறுதி செய்து உறுதியளித்தவர்களுமில்லை. வாக்குறுதிகளை நிறைவேற்றுபவர்களுமில்லை. மக்களின் நிலைமை 2003ஆம் ஆண்டைவிட மிக மோசமான நிலையிலேயே உள்ளது எனவும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# விகாரை மீது கைக்குண்டு வீச்சு பிக்கு ஒருவர் படுகாயம்

பொநலஸ்கமுவ பின்லாவ விகாரை மீது நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட கைக் குண்டுத் தாக்குதலில் பிக்கு ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த பிக்கு கொழும்பு தெற்கு போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் நடந்த சந்தர்ப்பத்தில் தான் தர்மசாலையில் இருந்ததாக விகாராதிபதி தெரிவித்தார். இச் சம்பவம் தொடர்பாக எட்டுப் பேரிடம் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொநலஸ்கமுவ பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# எஸ்.பி.திஸாநாயக்கவை விடுவிக்கக்கோரி அநுராதபுரத்தில் வழிபாடு

சிறைவாசம் அனுபவித்து வரும் ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்கவை விடுதலை செய்யக்கோரி அனுராதபுர ஜயசிறி மகாபோதியில் நேற்று அதிகாலை சமய வழிபாடு ஒன்று இடம் பெற்றுள்ளது.

இதன் போது எஸ்.பி.திஸாநாயக்கவின் மனைவி, ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த விஜயசேகர உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர். அத்துடன் இவர்கள் வணக்கத்துக்குரிய வல்லேகம சிறினிவாச நாயக்கதேரரையும் சென்று வணங்கினர்.

## -சுனாமியால் பாதிக்கப்பட்ட-

# வடகிழக்கு மக்களுக்கு உதவியோர் குறித்து விபரங்கள் பொலிசார் திரட்டல்

கடற்கோள் அனர்த்தத்தினையடுத்து வடக்குக் கிழக்கு பகுதி மக்களுக்கு உதவியவர்கள் பற்றிய விபரங்களைப் பொலிசார் தொடர்ந்தும் திரட்டிவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலையகத்திலிருந்து வடக்கு கிழக்கிற்கு சென்றவர்கள் தொடர்பில் விபரங்களை திரட்டிய சிறிலாங்காப் பொலிசார் தற்போது கொழும்பிலும் வெளியூரிலும் தொழில்புரியும் மலையக இளைஞர், யுவதிகள் பற்றிய விபரங்களையும் தோட்டம் தோட்டமாகச் சென்று சேகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிற்குச் செல்லும் மலையக இளைஞர்களை விடுதலைப்புலிகள் தங்கள் அமைப்பிற்குள் சேர்த்துக்கொள்வதாக சந்தேகம் ஏற்பட்டுள்ளதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சுனாமி நிவாரணப் பொருட்களை வடபகுதிக்கு எடுத்துச் சென்றோரில் சிலர் இன்னமும் அங்கிருந்து திரும்பவில்லை என்றும் இச்சந்தேகத்திற்கு இதுவே காரணமெனவும் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார் (32)

# இந்தியப் பிரதமரின் இல.விஜயம் ஜுலை மாதம் வரை ஒத்தி வைப்பு

இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தியப் பிரதமரின் விஜயம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் இலங்கை அரசாங்கத்திற்கு விரைவில் அறிவிக்கப்படுமென இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

17 வருடங்களின் பின்னர் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வருவதற்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த மாத இறுதியில் இடம்பெறுமென எதிர்பார்க்கப்பட்ட இந்திய பிரதமரின் விஜயம் எதிர்வரும் ஜீலை மாதத்தின் பின்னர் இடம்பெறும் எனத்தெரிய வருகின்றது.

இலங்கை இந்தியாவிற்கு இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் உள்ளிட்ட முக்கிய உடன்படிக்கைகள் இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்தின் போது கைச்சாத்திடப்படவிருப்பதாகவும் அவற்றை தயாரிப்பதற்கு வேண்டிய கால அவகாசத்தை வழங்குவதற்கு ஏற்ற வகையில் இந்தியப் பிரதமரின் விஜயம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

# கனடாவில் புலிகளைத் தடைசெய்யக்கூடாது

# பிரதமர், எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்து

## -கனேடிய செனட் சபை உறுப்பினர் தகவல்

தமிழீழ விடுதலைப்புலிகளை கனடாவில் தடைசெய்யக்கூடாது எனசிறிலங்கா பிரதம மந்திரியும் எதிர்கட்சி தலைவரும் வலியுறுத்தியுள்ளதாக இங்கு விஜயம் செய்துள்ள கனடாவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் செனட் உறுப்பினர்கள் சார்பில் செனட் சபை உறுப்பினர் டெரக் லீ தெரிவித்துள்ளார்.

தமது குழுவினர் பிரதமமந்திரி மகிந்த ராஜபக்ஷ எதிர்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜே வி பியின் முக்கிய உறுப்பினர்களை சந்தித்ததாக டெரக் லீ குறிப்பிட்டார்.

நாட்டின் சமாதான நகர்வில் தமிழீழ விடுதலைப்புலிகள் தற்சமயம் இணைந்துள்ளனர்.

எனவே அவர்களை கனடா தடைசெய்வது பொருத்தமானதல்ல என அவர்கள் விளக்கமளித்ததாகவும் செனட் உறுப்பினர் கூறினார்

இந்த நிலையில் ஜே.வி.பியின் முக்கிய உறுப்பினர்கள் சமஷ்டி தொடர்பில் எந்த ஒரு விளக்கத்தையும் கொண்டிருக்கவில்லை எனக்குறிப்பிட்டார்.

அவர்கள் தெரிந்தும் தெரியாதவர்களை போல இருந்தார்களா? என்பது தமக்கு தெரியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் துணை அரசியல் துறைப் பொறுப்பாளரை தாம் சந்தித்து அவர்களின் விளக்கத்தையும் தாம் பெற்றுக்கொண்டதாக கனேடிய செனட் உறுப்பினர் குறிப்பிட்டார்.

கனடாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை தடைசெய்வதா இல்லையா என்பது குறித்த அறிக்கையை தயாரிக்கவே தாம் இலங்கைக்கு விஜயம் செய்ததாக ரெடக் லீ கூறினார்.

### புலிகளின்...

களின் அரசியல் விவகாரக்குழுவினரை, தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிற்சர்லாந்துக் கிளைப் பொறுப்பாளர் குலம், தமிழீழ விடுதலைப்புலிகளின் சுவிற்சர்லாந்துக் கிளைச் செயற்பாட்டாளர்கள், இளையோர் அமைப்புப் பிரதிநிதிகள், தமிழீழ மக்கள் எனப்பலரும் பூச்செண்டு கொடுத்து வரவேற்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், தமிழீழ மகளிர் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் கீதா, சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த கலைத் தமிழ் ஆகியோர் அடங்கிய அரசியல் குழுவினர் சுவிற்சர்லாந்தின் அரசசார் பிரதிநிதிகள், வெளிவிவகார அமைச்சினர் ஆகியோரைச் சந்திக்கவுள்ளனர்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுவிற்சர்லாந்து பாராளுமன்றத்தில் இவர்கள் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது

### நவீன....

யடுத்தே அரபாத் கடுமையாக நோய்வாய்ப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனேடிய கடவுச் சீட்டை வைத்திருந்த இவர்கள் அரபாத் மீது லேசர் தாக்குதல் நடத்திய பின் தப்பி செல்ல முற்றபட்ட வேளை பலஸ்தீன பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்தாகவும் பலஸ்தீன தூதுவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து உடனடியாக இஸ்ரேலிய அரசுக்கு தாங்கள் அறிவித்தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யசீர் அரபாத்தின் குருதி மாதிரிகள் 16 நாடுகளில் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் அந்த அறிக்கைகள் அனைத்திலும் உயர் தொழில்நுட்ப நஞ்சூட்டல் மூலமே அரபாத் உயிரிழந்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் குயூபா தெரிவித்துள்ளார். (32)

## பரந்தன்-புதுக்குடியிருப்பு வீதியில் இருவிபத்துக்களில் ஒருவர் பலி ஒருவர் காயம்

பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியில் நேற்றைய தினம் இடம் பெற்ற இரு வெவ்வேறு வீதி விபத்துக்களின் போது ஒருவர் பலியானதுடன், மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை புதுக்குடியிருப்பில் இருந்து பரந்தனை நோக்கி மிக வேகமாகச் சென்ற கன்ரர் ரக வாகனம் வள்ளிபுனம் பகுதியில் வைத்து வீதியால் சென்றவரின் மேல் மோதியது. இதன் போது வள்ளிபுனத்தைச் சேர்ந்த சந்திரசேகரன் ஜெயபாலன் (வயது 43) என்பவர் சம்பவ இடத்திலேயே பலியானார். இவர் லெபனானிலிருந்து அண்மையில் வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை புதுக்குடியிருப்பில் இருந்து பரந்தனை நோக்கிச் சென்ற டாட்டா இனத்தைச் சேர்ந்த பிக்கப் வாகனம் ஒன்றும் கைவேலிப்பகுதியில் எதிரே புதுக்குடியிருப்பை நோக்கி வந்து கொண்டிருந்த உந்துருளி வழிவிடுகையில் உந்துருளி பாதையை விட்டு விலகிச்சென்று விபத்துக்குள்ளானது.

இதன் போது உந்துருளியில் பின்னால் இருந்து சென்ற உடையார் கட்டைச் சேர்ந்த க.ஜெயரூபன் (வயது-25) என்பவர் படுகாயமடைந்து புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (19,08)

### அன்ரன்....

இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற அறிமுக விழா நிகழ்வில் ஆசியுரையினை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ், பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையை யாழ்.பல்கலைக்கழக அரசியல் துறை விரிவுரையாளர் ரி.கணேசலிங்கம் யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி, விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமாரன் ஆகியோர் நிகழ்த்தினர். வெளியீட்டுரையினை அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு நிகழ்த்தினார். நூலில் முதல் பிரதியினை தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் வழங்க அதனை பல்கலைக்கழகப் பேராசிரியர் சிவநாதன் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து சிறப்புப்பிரதிகளை யாழ்பல்கலைக்கழக துணை வேந்தர் சு.மோகனதாஸ், யாழ். மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி, யாழ். நகர அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் பூமகள், தூயவன் அரசறிவியல் கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா, தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், போராளிகள், பொது மக்கள், மாணவர்கள் எனஆயிரக் கணக்கானோர் கலந்துகொண்டனர். (33,36,41)

### தெளிவற்ற...

எழுதப்பட்ட போரும் சமாதானமும் (War And Peace) நூலின் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் அனைத்து தமிழ் பேசும் மக்களையும் சமாதானம் பாதித்துள்ளது. சுனாமியினால் ஏற்பட்ட பாதிப்புக்களின் பின்னர் தமிழ் அறிவுசார் தொகுதியினரை சந்தித்த தலைவர் பிரபாகரன் இது எமக்கு இரண்டாவது சுனாமியென ஓரிரு சொற்களினில் உண்மையை எடுத்துக் கூறியிருந்தார். இன்று சர்வதேச சமூகம் இது பற்றித்தான் பேசுகிறது. சமூகத்தின் அறிவுசார் தொகுதியினரான புத்தி ஜீவிகள் சமூகத்திலிருந்து பிரிந்து சென்று சமூகத்தை மிரட்டக்கூடாது. சமூகத்துடன் அவர்களும் இணைந்து ஓர் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு பாடுபட வேண்டும் இதுவே எமது பகிரங்க கோரிக்கை யாகும்.

புலி பதுங்கிப் பாயுமா? அம்மா வீட்டிற்குப் போவாரா? ஜே.வி.பி எல்லாவற்றையும் குழப்புமா? என எங்கு பார்த்தாலும் கேள்வி கள் எழுப்பப்படுகின்றது. யுத்தத் தைத் தான் புலிகள் ஆரம்பிக்க வேண்டுமென்றால் சுனாமி அனர்த்தத்தையடுத்து அதனை ஆரம்பித்திருக்கலாம். சுனாமியினால் திருகோணமலை கடற்கரை அள்ளுண்டது. கடற்படையின் பிரதான தளம் முற்றாக அழிந்து போய் விட்டது. இந்தியா பாதிக்கப்பட்ட மாலைதீவைக் கூட கைவிட்டு விட்டு இங்கு வந்து திருமலை கடற்படைத் தளத்தை தற்போது மீளக் கட்டியெழுப்பி வழங்கியிருக்கிறது என்றார். (27)

### ஐக்கியப்பட்ட...

பாடுகளும் தீர்வுகளும் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகள் சபையில் உரைநிகழ்த்திய வெரீனா உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்களின் வாழ்விடங்களில் அமைக்கப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

2002 ஆம் ஆண்டு அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது சமாதானம் குறித்த எதிர்பார்ப்பு தமிழ் மக்கள் மத்தியில் காணப்பட்டதாகவும் ஆனால் தற்போது அந்த எதிர்பார்ப்பு குறைவடைந்து விட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (32)

### அன்னை...

தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற ஆரம்பநாள் நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடியினை கிளிநொச்சி மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர் பகீரதன் ஏற்றிவைத்தார்.

தமிழீழக் காவல்துறை நடுவப்பணியகத்தில் நேற்றுக் காலை 9.00 மணிக்கு காவல்துறை நடுவப்பணியக கண்காணிப்பாளர் சி.மாதவன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் காவல்துறையின் சிறப்புப்படையணி நிர்வாகப் பொறுப்பாளர் குமணன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

அக்கராயன் பிரதேசத்தில் அக்கராயன் மாவீரர் மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு அக்கராயன் பிரதேச வர்த்தகர் சங்கத் தலைவர் ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடரினை வர்த்தகர் சங்கத்தலைவர் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக்கொடியினை அக்கராயன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ச.திருமாறன் ஏற்றிவைத்தார். அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவு நாளின் ஆர்ம்ப நாள் நிகழ்வு நேற்று பளை, தம்பகாமம் முன்பள்ளியில் தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் புவனேந்திரன் தலைமையில் ஆரம்பமானது.

பொதுச்சுடரினை மகளிர் அமைப்பு பொறுப்பாளர் சந்தனா ஏற்றிவைத்தார். தேசியக் கொடியினை இயக்கச்சி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கதிரொளி ஏற்றிவைத்தார். தியாக தீபம் அன்னை பூபதி அவர்களின் 17 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு தொடர்பான தேசியக் கொடியேற்றல் வைபவம் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் நேற்றுக்காலை 9.00 மணிக்கு நடைபெற்றது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் அ.புவி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழத்தேசியக் கொடியினை யாழ்மாவட்ட மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைத்தார்.

கோப்பாய் கல்வியியற்கல்லூரியில் அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

கோப்பாய் கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை கோப்பாய் கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி ஏற்றிவைக்க, ஈகச்சுடரினை நல்லூர் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் பூமகள் ஏற்றிவைத்து அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்தார்.

இதனைத் தொடர்ந்து நினைவுரையை கல்வியியற்கல்லூரி ஆசிரிய மாணவர் டெறிஸ் ஆற்றினார்.

இதனைத் தொடர்ந்து கவியரங்கம் இடம் பெற்றது. அன்னை பூபதியின் 17 ஆவது நினைவு நாள் நிகழ்வு யாழ்.மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் பொது அமைப்புக்களின் ஒன்றியப் பொறுப்பாளர் தலைமையில் இடம் பெற்றது. அந்நிகழ்வின் தமிழீழத் தேசியக்கொடியினை யாழ். மாவட்ட நிதர்சனப் பொறுப்பாளர் அப்பன் ஏற்றிவைத்தார். தென்மராட்சிப் பிரதேசத்தில் அன்னை பூபதியின் நினைவுதின தொடக்க நாள் நிகழ்வுகள் நேற்று இடம் பெற்றது. கொடிகாமம், சாவகச்சேரி, கைதடிப் பிரதேசங்களில் பொது அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள், தேசிய எழுச்சிப் பேரவை மகளிர் சங்கங்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன. கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை கொடிகாமம் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் மு.இரத்தினம் ஏற்றிவைத்தார். தியாகி அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வின் ஆரம்ப நாள் நிகழ்வு புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தில் அப்பகுதி கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் கனகசுந்தரம் சுவாமி அவர்களின் தலைமையில் இடம் பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரினை புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் தயானந்தா ஏற்றிவைக்க தேசியக்கொடியை அப்பகுதிப்பிரதேசப் பொறுப்பாளர் பிறையாளன் ஏற்றிவைத்தார். துணுக்காய் பாண்டியன் குளம் பிரதேங்களில் அன்னைபூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவு நாள் ஆரம்ப நிகழ்வு மல்லாவி மாவீரர் மண்டபத்தில் வணிகர்மன்ற செயலாளர் தனுராஜ் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் பொதுச் சுடரினை வணிகர்மன்ற பொருளாளர் வரதன் ஏற்ற தமிழீழத் தேசியக்கொடியினை துணுக்காய் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் க.செல்வன் ஏற்றிவைத்தார். பாண்டியன்குளப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை பாண்டியன் குளம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இலக்கியன் ஏற்றிவைத்தார். (11,41,28,24,சோ,கு,ச)


# நன்றியுடன் வாழ்த்துகின்றோம்

குமரகுரு புடவை அழகுப் பொருள் வாணிபத்தினரால் இன்று கிளிநொச்சி கலாச்சார மண்டபத்தில் நடாத்தப்படும் பரிசளிப்பு விழா சிறப்புற நடைபெற வாழ்த்துவதோடு- ஒவ்வொரு கிழமை தோறும் தெரிவு செய்யப்படும் வெள்ளிநாத வாசகர்களுக்கு சிறப்புப் பரிசு வழங்குவதை முன்னிட்டு வாசகர்கள் சார்பில் நன்றி கூறுகின்றோம்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது